# ஜீவ மன்னா

அனுதினமும்

2015 பெப்ரவரி

41 வது வெளியீடு

உங்கள்
ஆத்மீக வளர்ச்சிக்காக
எங்களிடம்
பெற்றுக் கொள்ளக் கூடிய ஆவணங்கள்



மகே ஹத ரஜ இயேசு
VOL 01 - 05
(சிங்களம் ஒலி நாடா).



சுப ஹோராவ சஞ்சிகை
(தவறான உபதேசங்களில் விடுதலை).

தின மஞ்சரி
ஜீவ மன்னா
(சிங்களம் தமிழ்).



மகே ஹத ரஜ இயேசு
VOL 01 - 05
Audio தட்டு (சிங்களம்).



நீண்ட நேரத்திற்கான
ஜெப வேண்டுதல்கள்
(சிங்களம்).



என் உயிர் இயேசுவே
VOL 01 (தமிழ் ஒலி நாடா).



பாவத்தின் விளைவும்
பாதாளத்தின் நிலையும்
புத்தகம்
(சிங்களம் தமிழ்).



ஜீவ மன்னா சஞ்சிகை
(சிங்களம்).



என் உயிர் இயேசுவே
VOL 01
Audio தமிழ் ஒலி தட்டு.



ஞாயிறு
ஆராதனை
அடங்கிய DVD தட்டு.
(மொழிபெயர்ப்புடன்)
பிரசங்கங்கள்.



தேவ வசனங்கள் அடங்கிய
ஸ்டிகர் கீடெக்,
(சிங்களம்,தமிழ்,ஆங்கிலம்)
(மும்மொழிகளிலும்).



இயேசுவின் நாமத்தினால்
பேய்களைத் துரத்துவோம்
(ஜெபம் )
(சிங்களம் தமிழ்)
Audio ஒலி நாடா
CD தட்டு.



வல்லமையின் இரகசியம்
VCD தட்டு.




தெய்வீக அருள் பெற
திரையில் கை வைப்போம்
VCD தட்டு
(சிங்களம் தமிழ்).



சனிக்கிழமை
சுகமளிக்கும்
தெய்வீக ஆராதனை
அடங்கிய DVD தட்டு.



சுவிஷேச உவமைகள்
DVD தட்டு
(01 - 04).



பாடல் புத்தகம்
(சிங்கள பாடல்கள் 152
அடங்கியுள்ளது.)



பாதாளத்தின் பயங்கரத்தை
நீங்கள் அறிவீர்களா?
DVD தட்டு.



பிரசங்கம் பாடல்கள்
VOL 01 - 05,
பேய்களைத் துரத்துவோம்
(ஜெபம் - சிங்களம்),
திரையில் பார்ப்பதற்கு
பாடல்கள் 20வது அடங்கிய
சுவிஷேச உவமைகள்
பிரசங்கம் 12 அடங்கிய
(20 மணித்தியாலங்களுக்கு
மாத்திரம்) ''மெமரி சிப்''
(இதை கையடக்கத் தொலை
பேசியின் மூலம்
உபயோகப்படுத்த முடியும்.)



திரையில் பார்க்கும்
''பாடல்கள்'' அடங்கிய
விஷேச DVD தட்டு.



வெளிமாவட்ட தெய்வீக
ஆராதனைகள் அடங்கிய
DVD தட்டு.



ரன்மினி சின்தன
சமிதுட அயதின
(ஜெப உதவி புத்தகம்
சிங்களம்).

# மகிமை பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கே

## ஆசிரியர் உரை

தேவ பிள்ளைகளே,

### தேசத்தில் ஆத்மீக எழுப்புதலுக்காக ஆயத்தப்படுவோம்

41வது ஜீவ மன்னா தினமஞ்சரி வெளியீட்டின் மூலம் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். தேவனின் அநுக்கிரகம் எமக்கு மாதந்தோறும் கிடைக்கின்றபடியால் தேவனுக்கு ஸ்தோத்திரம். தேவனின் நாமம் மகிமையடைவதாக!

2015வது வருடம் தேசத்தில் ஆத்மீக எழுப்புதல் உருவாகின்ற வருடமாகவும் நாங்கள் தேசத்தில் பெரிதான ஆத்மீக மாற்றத்தைக் காணவும் நாமனைவரும் தேவ பாதத்தில் மன்றாடி விண்ணப்பிக்க வேண்டுமென்பதே எனது வேண்டுகோளாகும். ஏனென்றால் நாம் தேசத்தைக் குறித்து ஒரு விண்ணப்பத்திற்காக தேவன் முன்னிலையில் திறப்பிலே நிற்போமாயின் அந்த தேசத்திற்காக தேவன் தாமே கிருபையை ஊற்றுவதாக தேவ வசனத்தில் குறிப்பிட்டுள்ளது. எசேக்கியேல் 22:30இல் தேவ வசனம் ஒரு போதும் அழிந்து போகாதென்பதால் ஆத்மீக பிள்ளைகளான நாம் அனைவரும் இலங்கை நாட்டில் மகாபெரிய எழுப்புதல் மழையை வருஷிக்க தேவனை நோக்கி ஒருமனதாக ஒன்றுபட்டு ஜெபிப்போம்.


ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம். முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது. என்று வேத வசனத்தில் பிரசங்கி 14:12இல் எழுதியுள்ளபடியால் எங்கள் ஒருமனப்பாடு வெற்றியை உரிமையாக்கித் தருமென விசுவாசிக்கிறேன். இன்னுமாக இந்த தின மன்னா மஞ்சரியை உங்கள் நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் கொடுத்து பங்காளராகுங்கள். இந்த தின மஞ்சரிக்கூடாக உங்கள் ஆத்மீக வாழ்வில் ஒரு மாற்றத்தைப் பெற்றுக் கொண்டதைப் போல இன்னும் அநேகர் வரப்பிரசாதம் பெற்றுக் கொள்ள நீங்களும் உற்சாகத்துடன் செயல்படுங்கள். விலையை நிர்ணயிக்க முடியாத ஆத்மீக ஆசீர்வாதங்கள் மற்றவர்களுக்கும் பெற்றுக் கொள்ள செயல் புரிகின்ற நீங்கள் இன்னும் அநேக ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்வீர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் வாழ்வில் வெற்றி உதயமாகட்டுமென பிரார்த்திக்கின்றேன். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!

இப்படிக்கு
இயேசு கிறிஸ்துவுக்குள்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்

ஆத்மீக பார உருக்கத்தோடு
ஆவலாய் தன்னை அர்ப்பணித்த
ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளை
ஆழிசூழ் அகிலமெங்கும் விதைத்திடும் ஜீவ மன்னா!


**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

# கடந்த காலத்தை பார்க்கிலும் நீங்கள் "ஞானமுள்ளவர்களாக" இருங்கள்!



அன்பார்ந்தவர்களே! 2015 பெப்ரவரி மாதம் 28ம் திகதியோடு முடிவடைவதனால் ஜீவ மன்னா தினமஞ்சரியில் **விஷேச பக்கங்கள் மூன்றிலும்** உங்களுக்காக விஷேடமாக சில காரியங்களை எழுத இம்முறை எனக்கு சந்தர்ப்பங் கிடைத்தது. இந்த பகுதியில் நான் உங்களுக்குக் கூற முன் வந்தது நாம் எங்கள் ஆத்மீக வாழ்வில் எதிர் வரும் காலங்களில் அதிக விழிப்புடனும், புத்திக் கூர்மையுடனும் நடந்துக் கொள்ள வேண்டுமென்பதே. அன்பார்ந்தவர்களே! உலகில் தற்போது பாவிக்கும் முகநூல் (face book) தொலை பேசிகளுக்கூடாக அனுப்பும் குறுஞ் செய்திகள் (sms) இவற்றின் மூலமாக ஆத்துமாக்கள் இடறிப் விழுந்து போகிறதென்பது அறிந்துக் கொள்ள வாய்ப்பைப் பெற்றுக் கொண்டேன். உண்மையாகவே எனக்கு அப்படியாகக் கிடைத்ததைப் போன்று உங்களுக்கும் அறிந்துக் கொள்ள வாய்ப்பேற்பட்டிருக்கலாம். இவைகளுக்கூடாக சபைகளைப் பற்றி தகுதியற்ற விதமாகக் கூறி இழிவுப்படுத்துகிறார்கள்.




தேவ பிள்ளைகளே! பரிசுத்த வேதாகமத்தில் **வெளிப்படுத்தல் 12:10**இல் எழுதியிருப்பது **சாத்தான்** என்பவன் **இரவும், பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர் மேல் குற்றஞ் சுமத்துபவன்** என்றாகும். அதில் தெளிவாகக் கூறப்படுவது தேவ சபைகளைக் குறித்து அல்லது ஆத்மீக பிள்ளைகளைக் குறித்து குற்றப்படுத்துவது, அல்லது இழிவுப்படுத்துவது சாத்தானின் பட்சத்தில் இருப்பவர்களே என்றாகும். **பரி.லூக்கா 6:37**இல் தேவ வசனத்தின்படி எங்களுக்குக் குற்றவாளிகளென்று தீர்க்க முடியாது. அங்கு எழுதியுள்ளதாவது, "**மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள் அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள் என்றாகும்.** மனிதன் இன்னுமொரு மனிதனை ஒரு போதும் **குற்றப்படுத்தவும் தீர்ப்பிடவும்** முடியாது. மனிதன் இன்னுமொரு மனிதனை குற்றப்படுத்தினால், இகழ்வாகப் பேசினால் இயேசுகிறிஸ்துவின் தேவ **ஆவியானவர்** அவருக்குள் இல்லையென்பது தெளிவாகும்.

உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் "தம்முடைய குமாரனை உலகத்திற்கு அனுப்பியது அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே என **பரி.யோவான் 3:17**இல் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் உங்களை அவமானப்படுத்தும் உங்களைக் குற்றப்படுத்தும் யாரையும் குறித்து பயப்படாதீர்கள். ஏனென்றால் அவைகள் உண்மை ஆத்மீகத்திற்குரித்தானவைகளல்ல.

தேவ பிள்ளைகளே! **பரி.மத்தேயு 10:1**இல் எழுதியிருப்பது இயேசுகிறிஸ்து தனது 12 சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து **அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும், சகல நோய்களையும் தீர்க்கவும் அதிகாரம் கொடுத்தார்** என்றாகும். அதன் பிறகு அவர்கள் போகையில் **"பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள். குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணுங்கள். மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள் இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்."** என்றும் இன்னும் **பரி.மத்தேயு 28:19இல் ஆகையால் "நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி"** என்றும் கூறியுள்ளார். அது மாத்திரமின்றி அவர்கள் புறப்பட்டுப் போய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். இயேசுகிறிஸ்து அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார் என்பதை **மாற்கு 16:20** வேத வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அப்படியானால் இயேசுவின் சீஷர்கள் நடத்திய கிரியைகள் அற்புதங்கள் இல்லையா? அவைகள் அற்புதங்களெனின் இதோ **உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்** என்று எங்களுக்குப் பொருத்தனை பண்ணின இயேசுகிறிஸ்து எதிர்காலத்தில் அவரது சீஷர்களுக்கூடாக இப்படியாக அற்புதங்கள் நிகழும் போது சிலர் அதற்கு விரோதமாக **அற்புதங்களுக்கு பின்னால் போகாதீர்கள். கிரியை செய்வது தேவ ஆவியால் அல்ல,** என்று பதிதாக இயேசுவிடம் வரும் ஜனங்களுக்கு ஏன் இவ்வாறாக கூறுகிறார்கள் என்பதை நாம் அறியோம்.



அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஆத்மீக பிள்ளைகளான நீங்கள் அறிவுத்திறமை உள்ளவர்களாக இருங்கள். மாறுபாடான வசனங்களால் உங்களை ஏமாற்ற இடங்கொடாதீர்கள். தேவ வசனத்தில் எழுதியுள்ளபடி **கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக,** தேவ பக்தியின் வேஷத்தைத்தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாகவும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு. **2 தீமோத்தேயு 3:5** இல் **"மெய்யாகவே மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான் இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்"** என்று **பரி.யோவான் 14:12**இல் இயேசுகிறிஸ்து எங்களுக்குக் கூறியுள்ள பொருத்தனைகள் இன்றும் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. ஆகையால் மனிதனின் வாய் வார்த்தைகளுக்கு ஏமாறாது நீங்கள் அவைகளை ஞானத்தோடு சிந்தித்துப் பாருங்கள். உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். **வெற்றிகரமாக** உங்கள் ஆத்மீக பாதையில் பயணத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல இன்றும் தேவன் உங்களோடு இருக்கின்றார். **இயேசு துணை!**





# தொலை பேசி ஜெப வேண்டுதல்களின் போது பயனற்ற வசனங்களை உபயோகிக்காதீர்கள்!



அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! மேலே காணப்படும் தலையங்கத்தை பார்க்கும் போது நீங்கள் நினைப்பது என்ன? ஆனாலும் உங்களுக்கு இப்படியாகக் கூற வேண்டியுள்ளது. ஏனென்றால் எங்கள் பணியகத்தில் ஒரு நாளில் 24 மணித்தியாலமும் **தொலை பேசியில் ஜெப ஊழியம்** நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு நாளைக்கு 200, அல்லது 300க்கு அதிகமான அழைப்புக்கள் வந்துக் கொண்டிருக்கின்றன. எங்கள் பணியகத்தில் ஊழியம் செய்கின்ற உதவி தேவ அடியார்கள் அத்தோடு முழு நேர ஊழியர்கள் தொலை பேசி அழைப்புக்களுக்கு பதில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னுமாக இப்போதும் இந்த ஊழியத்திற்கூடாக ஆயிரக்கணக்கான தேவ பிள்ளைகள் அதிவிஷேட வல்லமையான பதில்களை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனையிலோ, இல்லாவிட்டால் கடிதங்களுகூடாகவோ தொலைப்பேசி அழைப்புக்கூடாகவோ (பெற்ற ஆசீவாதத்தைக் குறித்து) அவர்களது சாட்சியை தேவ மகிமையை வெளிப்படுத்த பகிர்ந்து கொள்வார்கள்.

தேவ பிள்ளைகளே! உங்கள் **தொலைபேசியில் ஜெப வேண்டுதல்களை தொகுத்தளிக்கும் போது உங்கள் ஜெப வேண்டுதல்களைக் குறிப்பிட்டு அவைகளுக்காக எம்மிடம் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்வதே எமக்கு மிகவும் இலகுவாக இருக்கும்.** ஆனாலும் சிலர் சில வேளைகளில் அவர்களது பிரச்சினைகளைக் கூறுமிடத்து (புதிய ஆத்மீக பிள்ளைகள், அத்தோடு ஆத்மீகரல்லாதவர்கள்) அவர்கள் சரீர சம்பந்தமான உணர்வுகள், செயற்பாடுகள், கணவன் மனைவி பிரச்சினைகள் அவர்களின் ஒழுக்கமற்ற முறைபாடுகள், காதல் சம்பந்தமாக சம்பந்தப்பட்ட இருவரினதும் கோரிக்கைகள், அவர்கள் அவர்களின் இரகசிய உறவுகள், அந்தரங்க இரகசியங்கள் என்பவற்றைக் கூறி, அவசியமற்ற முறையில் **வெளிப்படுத்தி ஜெபிக்கும்படியாக** கேட்டுக் கொள்கிறார்கள்.

அன்பார்ந்தவர்களே! ஜெப **வேண்டுதல்களை** எம்மிடம் **மிகச் சுருக்கமாக** கூறி, உங்கள் **அந்தரங்க காரியங்களை** பாதுகாத்து மிகவும் **ஒழுக்கமான முறையில் பேசுங்கள்.** அப்படியே உங்கள் பிரச்சினையை 5 நிமிடத்தில் மிகச் சுருக்கமாகக் கூறி, **உங்களுக்கு ஜெபிக்கும்படி கூறினால்** போதுமானது, அப்பொழுது காரணத்தை நாம் நன்றாக புரிந்துக் கொண்டு உங்களுக்காக **ஜெபிக்க** முடியும்.

தேவ பிள்ளைகளே! முன்பு உங்களுக்கு கூறியதைப் போன்று ஒரு நாளைக்கு 200க்கும் 300க்கும் இடையில் தொலை பேசி அழைப்புக்கள் வருகின்றன. அனைவருக்கும் தேவைப்படுவது **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கும் வல்லமையான ஜெபமே** ஆகையால் உங்கள் காரணங்களை மிகச் சுருக்கமாகக் கூறுவீர்களானால் போதுமானது பரிசுத்த வேதாகமத்தில் **பரி.மத்தேயு 6:8**இல் **"உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்கிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவையென்று அவர் அறிந்திருக்கிறார்."** என்று எழுதப்பட்டிருப்பதால் ஜெப வேண்டுதல்களை எங்களுக்கு கூறுவதற்கு முன்னார் அவைகளுக்கு பதில் கொடுத்து உங்களுக்கு ஆறுதல் கொடுப்பது எப்படி? எந்த வழியில் பிரச்சினைகளுக்கு பதில் கொடுப்பது என்று உங்கள் சிருஷ்டிப்பின் தேவன் நன்றாக அறிந்திருக்கிறார்.

அன்பார்ந்தவர்களே! இந்த காரியங்களை உள்ளத்தில் கொண்டு எதிர்காலத்தில் ஞானமுள்ளவர்களாக செயல்படுங்கள் என்று கூறி இயேசுவின் நாமத்தில் வாழ்த்தி அன்புடன் விடைபெறுகின்றேன்.

**இயேசு துணை —**

போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா

பெப்ரவரி 01

ஞாயிறு

# உங்கள் ஆவிக்குரிய போராயுதங்களை தரித்துக் கொள்ளுங்கள்!

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம்
அதி: 02 - 03

**"எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது."** (2 கொரிந்தியர் 10:4)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் மாதத்தின் முதல் நாளான இன்றும் மாதம் முழுவதுமாகவும் **தேவ சமாதானத்தையும் தெய்வீக சுகத்தையும், இயேசுவுக்குள் மகிழ்ச்சியையும் பெற்று இனிதே வாழும்படியாக வாழ்த்துகின்றேன்.** ஆவிக்குரிய பிள்ளைகளான எமக்கு ஒவ்வொரு நாளும் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க நேரிடுவதை நாம் அறிந்தவர்களாக இருக்கின்றோம். நாம் இயேசுவினால் பரிசுத்த ஜனங்களாக வேறுபிரிக்கப்பட்டிருப்பதனால் எங்கள் அழைப்புக்கு விரோதமாக அனேக **உபத்திரவங்கள், சவால்கள், சோதனைகள்** வரக்கூடும். ஆனாலும் **கலங்காதிருங்கள்!**

தேவ பிள்ளைகளே! எங்களுக்கு உபத்திரவங்கள், பிரச்சினைகள், கஷ்டங்கள் ஏற்படுவது பெரும்பாலும் மனிதர்களின் மூலமாகவேயாகும். அவைகளை எமக்கு விரோதமாக எழுப்புவது, **மனிதர்களைத் தூண்டுவது எமது எதிரியான சாத்தானே அன்று ஏதேன் தோட்டத்தில் உள்ளத்தை பாவத்தில் விழத் தூண்டிய அதாவது விலக்கப்பட்ட கனியை உண்ணச் செய்த புராண சர்ப்பமாகிய சாத்தானே**, ஆகையால் மனிதர் எமக்கு எவ்வளவாக விரோதமாக எழும்பிடினும் நாம் அவர்களுக்கு விரோதமாக செயல்பட முடியாது. பரிசுத்த வேதாகமத்தில் **எபேசியர் 6:12**இல் எழுதியுள்ளபடி எங்கள் "போராட்டங்கள் மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல என்பதை புரிந்துக் கொள்வோம். விஷேடமாக **2 கொரிந்தியர் 10:4** இல் எழுதியுள்ளவாறு எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்திற்கேற்றவைகளாயிராமல் அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலமுள்ளவைகளாயிருக்கிறது." உங்கள் ஆவிக்குரிய போராயுதங்கள் என்றால் தேவனது சத்தியம், நீதி, சமாதானம், விசுவாசம், தேவ வசனம், இரட்சிப்பு என்பவைகளாகும். ஆகையால் நாங்கள் மனிதர்களோடு கோபப்படாமல், பொறாமைப்படாமல் எப்பொழுதும் தேவனுக்குள் **ஜெபத்தில் பெலப்பட்டு அனைத்திலும் வெற்றி பெற வேண்டும்.**

தேவ பிள்ளைகளே! உலக மனிதர்களால் மாத்திரமின்றி உங்களோடு இணைந்து செயல்படும் ஆவிக்குரிய நண்பர்களுக்கூடாகவும் உங்கள் அயல்வாசிகள், இல்லத்தவர்களுக்கூடாகவும் **உங்களுக்கு பலவித பிரச்சினைகள், இன்னல்கள், தடைகள் ஏற்படலாம்.** அப்போது நீங்கள் கலங்காதிருங்கள்! உங்கள் உள்ளத்திற்கு வேதனையைக் கொடுத்து உங்கள் ஆவியை பின்மாற்றமடையச் செய்யவும். உங்கள் ஆத்மீக வாழ்வில் பெலன் இல்லாமற் செய்ய எழும்பிடும் அசுத்த ஆவிக்கு விரோதமாக நீங்கள் எழும்பிடுங்கள். **ஆவிக்குரிய போராயுதங்களைத் தரித்து தேவனுடைய பாதத்தில் ஜெபித்து தேவ ஆவியில் நிரம்பி பெலப்படுங்கள்.** அப்போது அனைத்தையும் பெற்றுக் கொள்வீர்கள். **இன்று வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! எனது யுத்தமானது மாம்சமானதல்ல என்றும் அது ஆத்மீக யுத்தமென்றும் நான் புரிந்துக் கொண்டேன். ஆகையால் உங்கள் தேவ ஆவியில், தேவ பெலனில் என்னை நிறைத்திடுங்கள். உங்கள் ஆவியின் போராயுதங்களைத் தரித்துக் கொள்ள ஆசீர்வதியுங்கள். இயேசுவின் நாமத்தில். -ஆமென்-

**வேத வாக்குத்தத்தம்**

"ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்."
(எபேசியர் 6:13)

ஜீவ மன்னா

பெப்ரவரி 02 திங்கள்

**நீங்கள் நித்திய ஜீவனான வசனங்களை உரிமையாக்கிக் கொள்ளுங்கள் !**

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் அதி: 04 – 05

**“அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்.”** (பரி.யோவான் 12:50)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! வேதத்தின் வெளிச்சத்தில் நிச்சயமாகவே கர்த்தரின் வழிகளை அறிந்து கொள்ளலாம். இன்றைய நாளில் தேவனின் சித்தப்படி செய்து அவருக்கு பிரியமானவர்களாக வாழும்படி **ஜீவிக்கின்ற இயேசுவின் வல்லமையான நாமத்தில் வாழ்த்துகின்றேன்.** பரலோகப் பிதாவானவர் தனது குமாரனை இயேசுகிறிஸ்துவை இவ்வுலகிற்கு அனுப்பியது எம்மை மீட்கும்படியாகவே. **இரட்சிப்பு என்பதன் கருத்து ஒன்றிலிருந்து நாம் விடுதலை பெறுதலே.** உலக மனிதர்கள் பலவிதமான உபத்திரவங்களின் மத்தியில் வாழ்கிறார்கள். ஆனால் நாம் ஒருபோது அப்படியிருந்த போதிலும் **இன்று நாம் இயேசுவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டுள்ளோம். நாங்கள் விடுதலைப் பெற்றுள்ளோம்.**

தேவ பிள்ளைகளே! தேவ வசனத்தில் எழுதப்பட்டுளள்தாவது, எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களாகி என்றாகும். **ரோமர் 3:23** ஆகையால் **எங்கள் பிரச்சினை, உபத்திரவங்கள், துன்பங்களில் நோய்களில் மாத்திரமின்றி எங்கள் பாவங்களிலிருந்து விடுதலைப் பெற இரட்சிக்கப்படுவது அவசியமாகும்.** அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்று **1 யோவான் 1:7**இல் எழுதியுள்ளமையால் இயேசுவின் பேரில் விசுவாசம் கொள்ளும் போது எங்களுக்காக சிந்திய கறைபடாத மாசற்ற இரத்தத்தினால் நாங்கள் பாவத்தில் விடுதலையடைவோம் அது மாத்திரமன்று **இயேசுவுக்குள் நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வோம்.** இன்றைய நாளில் மேலே குறிப்பிட்டுள்ள பிரதான வசனத்தில் இயேசுகிறிஸ்து கூறுவதாவது, அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன். ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார். இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்து வெளிப்படுத்துவதாவது **தேவ வசனமானது எங்களுக்கு நித்திய ஜீவனை உரிமையாகப் பெற்றுக் கொள்ளச் செய்யும்.**

தேவ பிள்ளைகளே! ஆகையால் எங்களை பாவத்தினின்று மீட்டு நித்திய ஜீவனைப் பெற எங்களுக்கு வரப்பிரசாதம் பெற்றுத் தந்த **தேவ பிதாவானவரின் கட்டளைகளை கடைப்பிடித்து இவ்வுலகில் வாழ வேண்டும்.** தேவனது ஒவ்வொரு வசனமும் எங்களுக்கு நித்திய ஜீவனின் உரிமையாளராக மாற்றுவதாலும் தேவனாகிய இயேசுகிறிஸ்து எங்களுக்குக் கூறிய அனைத்து வசனங்களும் பரலோக தேவ பிதாவானவரின் ஜீவனுள்ள வசனமாகையாலும் நாங்கள் தவறாது **அவற்றை கடைப்பிடித்து பரலோக இராஜ்யத்திலே எங்களுக்கு உரிமையான இடத்தை சுதந்தரித்துக் கொள்வோம். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

தேவனே! எனக்கு நித்திய ஜீவனை சொந்தமாக்கி தர என்னை அழைத்துக் கொண்டீர்கள். உங்கள் வசனம் நித்திய ஜீவனாகும். ஆகயைால் உங்கள் வசனத்தின்படி ஜீவிக்க எனக்கு உபகாரம் செய்யுங்கள்.

இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.” (பரி.யோவான் 14:6)

ஜீவ மன்னா

பெப்ரவரி 03
செவ்வாய்

## எமது தேவைகளை மாத்திரம் நிறைவேற்றிக் கொள்ளாது மற்றவர்களை குறித்து சிந்திப்போம் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம்
அதி: 06 – 07

**"தாவீது பெத்லகேமின் ஒலிமுகவாசலில் இருக்கிற கிணற்றின் தண்ணீரின்மேல் ஆவல்கொண்டு: என் தாகத்திற்குக் கொஞ்சந் தண்ணீர் கொண்டு வருகிறவன் யார் என்றான்."** (2 சாமுவேல் 23:15)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்று உங்களுக்கு **தீமைகளை எங்களுக்கு நன்மைகளாக மாற்ற வல்லவராகிய தேவன் உங்களோடு இருந்து வழிநடத்தும்படியாக வாழ்த்துகிறேன்.** பரிசுத்த தேவன் அவரது குமாரனான இயேசுகிறிஸ்துவை பலியாக ஒப்புக் கொடுத்தது அவரது இரக்கத்தின் காரணமாக நம் ஒவ்வொருவரையும் தனது பரிசுத்தமான பிள்ளைகளாக்கிக் கொள்வதற்கேயாகும். ஆகையால் **நாம் அனைவரும் மாமிசத்தின் ஆசைகள், இச்சைகளினின்று நம்மைக் காத்துக் கொண்டு தேவனுக்குள் பரிசுத்த ஜீவியம் வாழ வேண்டியது மிக அவசியமாகும்.**

தேவ பிள்ளைகளே! மேலே குறிப்பிட்டுள்ள **2 சாமுவேல் 23:15**இல் **"தாவீது பெத்லேகேமின் ஒலிமுகவாசலில் இருக்கிற கிணற்றின் தண்ணீரின் மேல் ஆவல் கொண்டு என் தாகத்திற்குக் கொஞ்சந் தண்ணீர் கொண்டு வருகிறவன் யார் என்றார்."** என்று எழுதப்பட்டுள்ளது. அப்பொழுது தாவீதுக்கு விரோதமாக பெலிஸ்தரின் தானணயம் பெத்லேகமிலே இருந்தது. தாவீதுக்கு இருந்த பராக்கிரமசாலிகளான 30 பேரில் அபிசாய், பெனாயா, ஆசகேல் என்னும் மூன்று பராக்கிரமசாலிகள் பெலிஸ்தியரின் இராணுவப்படைகள் பாளயத்திலே புகுந்து போய் மடங்கடித்து பெத்லேகேம் ஒலிமுக வாசலில் காணப்பட்ட கிணற்றிலிருந்து தண்ணீர் மொண்டு தாவீதினிடத்திலே கொண்டு வந்தார்கள். ஆனாலும் **"தாவீது ராஜா அதைக் குடிக்க மனதில்லாமல் அதைக் கர்த்தருக்கென்று ஊற்றிப் போட்டு "கர்த்தாவே தங்கள் பிராணனை எண்ணாமல் போய் வந்த அந்த மனுஷரின் இரத்தத்தைக் குடிக்கும் இந்தச் செயல் எனக்குத் தூரமாயிருப்பதாக,** என்று சொல்லி அதைக் குடிக்க மனதில்லாதிருந்தான்.

தேவ பிள்ளைகளே! தாவீது ராஜா தனது உள்ளத்தில் ஏற்பட்ட ஆவலைக் குறித்து வார்த்தையில் வெளிப்படுத்திய அக்கணமே அவனது யுத்த சேனையில் பராக்கிரமசாலிகள் மூன்று பேர் தமது எஜமானின் ஆவலை நிறைவேற்றும் பொருட்டு தமது உயிரையும் பொருட்படுத்தாது **சத்துரு சேனைகளின் மத்தியில் சென்று பெத்லேகேமின் ஒலிமுக வாசலில் இருக்கின்ற கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்தார்கள்.** ஆனாலும் தாவீது அதைக் குறித்து மகிழ்ச்சியடையவில்லை. ஏனெனில் தனது உள்ளத்தின் ஆசை நிறைவேறுவதை விட அந்த பராக்கிரமசாலிகள் **3 பேரினதும் வாழ்க்கையைக் குறித்து சிந்தித்தார்.** ஆகையால் அந்த நீரைப் பருகுவது **அந்த மூன்று பராக்கிரசாலிகளின் ஜீவியத்தைக் குறித்து அவர் சிந்தித்தார்.** ஆகையால் அந்த தண்ணீரைக் குடிப்பது பராக்கிரமசாலிகளின் இரத்தத்தைக் குடிப்பதற்கு சமன் என்று நினைத்து அதைக் குடிக்க விரும்பவில்லை நீங்களும் எப்போதும் உங்கள் உள்ளத்தின் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதைப் பார்க்கிலும் **மற்ற மனிதர்களை நேசித்து உபசரியுங்கள். வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் எங்களைக் குறித்து உபசரித்து எங்களுக்காக தன் சொந்த மகனையே எமக்காக பலியாகக் கொடுத்தார். என்னைக் குறித்து நான் கவலைப்படாதபடி, மற்ற மனிதர்களை உபசரிக்க எனக்கு உதவி செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."
(பரி.மத்தேயு 18:10)

ஜீவ மன்னா

பெப்ரவரி **04**
புதன்

# உங்களை ஒரு போதும் கைவிடாத தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 08 – 09

**"என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணாமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்."** (பரி.லூக்கா 15:24)

அன்பு மிகு தேவ பிள்ளைகளே! நித்திய பிதாவானவராகிய ***ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக என வாழ்த்துகிறேன்.*** உலக மனிதர்களது வழக்கமெனின் மனிதன் நன்றாக வாழுமிடத்து அவனுக்கு நட்பு, உறவு, சொந்தபந்தங்கள், என்பனவைகள் சூழ்ந்துக் கொள்ளும். அவன் தோல்வியடைகின்ற போது அனைத்தும் அவனைக் கைவிட்டு விலகி விடும். ஆனாலும் ***எமது பரலோக பிதாவானவர் எம்மைக் கைவிட்டு ஒரு போதும் விலகுவதில்லை.***

தேவ பிள்ளைகளே! கெட்டகுமாரன் உவமையில் ***"ஒரு மனிதனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள் என்றும் ஒரு நாள் மகன் தகப்பனை நோக்கி தகப்பனே ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தா வேண்டும் என்றான்"*** என்று வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் அந்தத் தகப்பன் எதுவுமே கூறாமல் தனது ஆஸ்தியை பங்கிட்டுக் கொடுத்தான். அவைகளோடு தூரதேசம் புறப்பட்டுப் போய் ***ஜீவனம் பண்ணி தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான்.*** எல்லாவற்றையும் செலவழித்த பின் அத்தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத்தொடங்கி உணவின்றி பசியினால் சாகிறேன்என வருந்தினான். புத்தி தெளிந்து அவன் என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குக் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது. எழுந்து என் தகப்பனிடத்திற்குச் சென்று ***"தகப்பனிடத்திற்குப் போய்" தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன் என மன்னிப்பு கேட்பேன் என நினைத்து தகப்பனின் வீடு சென்றான்.***

தேவ பிள்ளைகளே! தனது இளைய மகன் மீண்டுமாக இல்லத்திற்கு வந்ததைக் குறித்து அந்த தகப்பன் மிகுந்த சந்தோஷமடைந்தார். அப்பொழுது தகப்பன் தனது உழியக்காரரை நோக்கி ***உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து இவனுக்கு உடுத்தி இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்கு பாதரட்சைகளையும் போடுங்கள்.*** கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள். நாம் புஷித்து சந்தோஷமாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான் திரும்பவும் உயிர்த்தான். காணாமற் போனான் திரும்பவும் காணப்பட்டான் என்று கூறினார். தனது ஆஸ்தியின் பங்கை எடுத்துக் கொண்டு தகப்பனது ***உள்ளத்தை துக்கப்படுத்தி*** வீட்டை விட்டு வெளியேறிய அந்த மகனை கைவிட்ட தகப்பனைப் போன்று எங்கள் ***தேவன் ஒரு போதும் கைவிடமாட்டார். வெற்றிச் சிறந்த நாள்!***

ஜெபம்

என் தேவனே! நீங்கள் ஒரு போதும் கை விடாத தேவனாகையால் ஸ்தோத்திரம். உங்களுக்கு கீழ்படியாது உங்களைவ விட்டு விலகி போகாது உங்கள் அன்பில் நெருங்கி கிட்டிச் சேர்ந்து வாழ எனக்கு உபகாரம் செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"...சீர்கெட்ட இஸ்ரவேலே, திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் உங்கள்மேல் என் கோபத்தை இறங்கப்பண்ணுவதில்லை; நான் கிருபையுள்ளவரென்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் என்றைக்கும் கோபம் வைக்கமாட்டேன்." (எரேமியா 3:12)

ஜீவ மன்னா
பெப்ரவரி 05
வியாழன்

## உங்கள் மீது அளவற்ற அன்பு கொண்டிருக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
யாத்திராகமம் அதி: 10 – 11

**"...அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்."** (லூக்கா 15:20)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய ***சர்வ வல்லமையுள்ள இயேசுவின் நாமத்தில் இக்காலைப் பொழுதில் மகிழ்ச்சியுடன் வாழ வாழ்த்துகின்றேன்.*** எங்கள் பரலோக தேவ பிதாவானவர் யாரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணும் தேவன் ஒளியிகளுக்கு பிதாவாயிருக்கிறார். ஆகையால் ***இன்றும் அவரது ஈடில்லாத அன்பு அவரது பிள்ளைகள் குறைவில்லாமல் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.***

***தேவ பிள்ளைகளே! இந்த ஜீவ மன்னா தினமஞ்சரிக்கூடாக,*** உங்கள் யாவருக்கும் தேவ பிதாவானவரின் அன்பைக் குறித்துச் சொல்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பமும் தேவனின் அன்பினாலே என்றால் மிகையாகாது. அத்தோடு அதுவும் நான் பெற்ற அதிர்ஷ்டமே என நினைக்கின்றேன். ***"உலகத்தில் உபத்திரவமுண்டு"*** என்று இயேசுகிறிஸ்து எங்களுக்கு கூறியுள்ளமையால் நீங்கள் ஆத்மீக வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்த போது தேவனை மிகவும் அன்போடு நெருங்கி கிட்டிச் சேர்ந்து சந்தோஷத்துடன் வாழ்ந்தீர்களெனினும், பின்பு உங்கள் ஆத்மீக பயணத்தில் முன்னோக்கிச் செல்கின்ற போது பலவிதமான ***தடைகள், போராட்டங்கள்*** என்பனவைகளுக்கு நீங்கள் முகங் கொடுக்க நேரிட்ட வேளை ***உங்கள் சந்தோஷம், சமாதானம் உங்களை விட்டு கொஞ்சம் விலகிச் சென்றதா?*** அப்பொழுது உங்களை அறியாமலே ***உங்கள் கரங்களால் பிழைகள், குறைகள் நிகழ்ந்ததா?*** ஆனாலும் எங்கள் பரலோகப் பிதா எங்களின் அனைத்து மீறுதல்களையும் மன்னித்து மீண்டுமாக அன்போடு எங்களை தம்மண்டையில் கிட்டிச் சேர்த்துக் கொள்வாராக! ஏனென்றால் **பரி.லூக்கா 15**வது அதிகாரத்தில் கெட்ட குமாரன் என்ற உவமையில் நேற்று எங்களுக்கு தேவன் எங்களுக்குக் கூறியுள்ளது பரலோகப் பிதாவானவர் ***எம்மை ஒரு போதும் கைவிடமாட்டார் என்றாகும்.***

தேவ பிள்ளைகளே! சில வேளைகளில் எங்கள் தந்தையர் ***தங்கள் பிள்ளைகள் கீழ்படியாத போது, பிழைகள் செய்கின்ற போது, பிள்ளையை அடிக்கும்படியாக கையை நீட்டிய வண்ணமாக பிள்ளைக்கருகில் செல்லும் போது பிள்ளை பயத்தால் அழும்.*** பிள்ளையின் மேல் இரக்கங் கொண்டு அடிக்காமல் விட்டு விடுகின்ற வேளைகளையும் நீங்கள் கண்டிருப்பீர்கள் அல்லவா? எங்கள் மாம்சமான தந்தையர் அப்படியாக பிள்ளைகளை மிகவும் நேசிப்பீர்களானால், எங்களை தாயின் கர்ப்பத்தில் உருவாக்கி உலகில் பிறக்கச் செய்து தம்மண்டை அழைத்துக் கொண்ட பரலோகப் பிதா எவ்வளவாக நேசிப்பார் என்பதை உணர்ந்துக் கொள்வீர்களா? **பரி.லூக்கா 15:20**இல் கூறியிருப்பது போல ***"கெட்டகுமாரன் தந்தையிடம் மீண்டுமாக தேடி வரும் வேளை, தூரத்திலே அவனை அறிந்து ஓடிச் சென்று அரவணைத்து முத்தமிட்டதையாகும்."*** இன்றும் தேவனது அன்பு உங்கள் பேரில் அவ்வண்ணமே என்பதை மறவாதீர்கள். ***இன்று மனந்திரும்பும் மனமகிழ்ச்சியின் நாள்!***

ஜெபம்

என் தேவனே! நீங்கள் எமக்குக் காட்டுகின்ற அன்பு எல்லையற்றது. அப்படியே அது ஒரு போதும் மாறாததாகும். எனது பிழைகளை மன்னித்து இன்றும் உங்களது அன்பினால் என்னை உங்கள் அருகில் சேர்த்துக் கொள்ளுங்கள். இயேசுவின் நாமத்தில் . ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"...ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்." (எரேமியா 31:3)

ஜீவ மன்னா
பெப்ரவரி **06**
வெள்ளி

## நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்களைக் காத்துக் கொள்ளுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 12 – 13

**"சில நாளைக்குப்பின்பு, இளையமகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்."**
(பரி.லூக்கா 15:13)

அருமையான தேவ ஜனங்களே! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜீவனுள்ள தேவனால் தெரிந்துக் கொள்ளப்பட்ட **ஜனங்களான நீங்கள் மகிழ்ச்சிகரமான நாளைப் பெற்றுக் கொண்டீர்கள் என விசுவாசத்தோடு இன்றைய காலைப் பொழுதில் வாழ்த்துகின்றேன்.** எங்கள் படைப்பின் தேவனானவர் தனது சொந்த பிள்ளைகளாக உலகில் வேறுபடுத்தி உலகில் மற்ற மனிதர்களுக்கு கிடைக்காத பரலோக ஆசீர்வாதங்களில் நிரப்புகிறார். ஆகையால் **உள்ளம் கலங்காதிருங்கள்!**

தேவ பிள்ளைகளே! உலகில் பிரச்சினை, இன்னல்கள், நோய்கள் காரணமாக **துக்கத்துடன் வாழ்ந்த எங்களை சொந்த மகவுக்கூடாக எம்மை அழைத்து எமது வாழ்விலிருந்த துக்கங்கள், வேதனைகள் என்பவற்றிலிருந்து எம்மை மீட்டு எமக்கு சந்தோஷம், சமாதானம் அளித்த** எமது பரலோக பிதா இப்படியாக எம்மை உலகில் வேறுபடுத்தி, நாங்கள் இயேசு என்றும் வல்லமையான நாமத்தில் **கேட்பதனைத்தையும், நன்மையானவைகளையும், அவைகள் எமக்கு தகுதியானவைகளாயும் இருப்பின் பெற்றுத் தருகின்றார்.** ஒரு தந்தை தனது பிள்ளைக்கு எவ்வளவு அன்பானவராக இருக்கின்றாரோ அவ்வாறாக அதற்கும் மேலதிகமாக எம்மை நேசிக்கின்றார். தேவன் நேற்றைய நாளில் தேவன் கூறியது தமது அளவற்ற அன்பைக் குறித்தாகும். ஆனாலும் தேவன் இன்று கூறுவது வேறொன்றை குறித்தாகும்.

தேவ பிள்ளைகளே! தனது **இளையமகன் தகப்பனிடம் ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தர வேண்டும் என்றான்.** அந்தப்படி அவன் அவர்களுக்குத் தன் ஆஸ்தியைப் பங்கிட்டுக் கொடுத்தது எல்லா ஆஸ்திகளும் அவர்களுக்கே உரிமையானது என்பதாலும் அவர்கள் மேல் கொண்ட அளவு கடந்த அன்பினாலேயே ஆகும். ஆனாலும் **இளையமகன் தனக்கு கிடைத்த ஆசீர்வாதத்தை இழந்தான்.** என்று மேலே குறிப்பிட்டுள்ள வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முடிவில் **அவனின் வாழ்க்கையில் வறுமை மாத்திரமே மிகுதியாயிற்று.** பரலோகப் பிதாவின் ஆசீர்வாதத்தைப் பெற்ற நீங்கள் தேவனின் சமுகத்தினின்று தூரமாய் போய் விடாதீர்கள். இல்லாவிடின் உங்களில் கீழ்படிவு இன்மையால் நீங்கள் ஆசீர்வாதத்தின் உரிமைகளை இழந்து போகலாம். ஆகையால் நீங்கள் பெற்ற **ஆசீர்வாதங்களைப் பாதுகாத்துக் கொள்ள தேவ சமுகத்தில் தேவ அன்பில் நிலைத்திருங்கள். இன்று வெற்றிச் சிறந்த நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! உலகில் துக்கத்துடனும், வேதனையுடனும் ஜீவித்த என்னை நீங்கள் தெரிந்து அழைத்துக் கொண்டமையால் ஆசீர்வாதமுள்ளவனாய் மாற்றினீர்கள். உங்களுக்குள் தேவ அன்பில் நிலைத்திருந்து ஆசீர்வாதத்தைக் காத்துக் கொள்ள எனக்கு உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"எனக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனோ, தன் ஆத்துமாவைச் சேதப்படுத்துகிறான்; என்னை வெறுக்கிறவர்கள் யாவரும் மரணத்தை விரும்புகிறவர்கள் என்று சொல்லுகிறது." (நீதிமொழிகள் 8:36)

ஜீவ மன்னா

பெப்ரவரி 07

சனி

## சதாகாலமும் உங்களுக்குள் வாசம் பண்ணும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம்
அதி: 14 – 15

**"சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு; இதோ, நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."**
(செகரியா 2:10)

அருமையான தேவ பிள்ளைகளே! மகிமையுள்ள மாறாத தேவன் **இயேசுகிறிஸ்துவின் ஜீவனுள்ள நாமத்தினால் இன்றைய தினத்தில் அதி விசேஷித்த ஜெயத்தைப் பெறும்படியாக பிரார்த்திக்கின்றேன்.** உலகில் அநேக தேவர்கள் இருக்கின்ற போதிலும் எல்லாருக்கும் மத்தியில் மனிதர்களோடு, மனிதர்களுக்குள் வாசம் பண்ணும் தேவனொருவர் என்றால் அவர் எங்கள் மத்தியில் ஜீவிக்கின்ற தேவனேயாவார். ஆகையால் **தேவனைக் குறித்து அறிந்த அனைத்து மனிதர்களும் மிக அதிரஷ்டக்காரர்கள்!**

தேவ பிள்ளைகளே! உங்கள் தேவன் இன்றும் உங்களை எவ்வளவாக நெருங்கி கிட்டிச் சேர்ந்துள்ளார்? ஏனெனில் இன்றைய தினத்தில் இந்த **ஜீவ மன்னா தின மஞ்சரியை வாசிக்கின்ற நீங்கள் யாராக இருப்பினும் உங்களோடு தேவ வசனத்திற்கூடாக தேவன் பேசுகின்றார்.** மேலே குறிப்பிட்ட **சகரியா 2:10**இன் பிரதான தேவ வசனத்தில் எழுதியிருப்பது, **"சீயோன் குமாரத்தியே கெம்பீரித்துப்பாடு, இதோ நான் வந்து உன் நடுவில் வாசம் பண்ணுவேன்"** என்று கர்த்தர் சொல்லுகிறார். அன்று இஸ்ரவேலின் தேவன் சீயோன் வாசிகளுக்கு எவ்வாறகக் கூறினாரோ இன்று தேவன் எங்களுக்குள் இருப்பது எப்படி என்று நீங்கள் சிந்திக்கலாம். தேவன் நித்திய தேவனாவார். ஆகையால் இன்றும் **தேவன் மாறாதவராகவும், ஒரே வண்ணமாக வசனத்தின்படி கிரியை செய்பவராக இருக்கிறார்.**

தேவ பிள்ளைகளே! எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்கள் பாவங்கள் காரணமாக **தனது ஒரே பேறான மைந்தனை மனுவுருவில் உலகிற்கு அனுப்பினார்.** அவர் எங்களுக்காக உலகில் அவதரித்து சிலுவையில் தன்னையே பலியாக ஒப்புக் கொடுத்து மீண்டுமாக மரித்தோரிலிருந்து எழுந்து பரலோகம் சென்றார். **"நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன்."** உங்களிடத்தில் வருவேன் என்று எங்களுக்கு வாக்களித்த **இயேசுகிறிஸ்து தேற்றரவாளனான பரிசுத்த ஆவியானவராக மீண்டும் எங்களுக்குள் வாசம் பண்ணுகிறார்.** நீங்கள் அதை விசுவாசித்து தேவனைத் துக்கப்படுத்தாது உங்கள் தேவ பிதாவானவரின் அன்பான பிள்ளையாக ஜீவியுங்கள். **யோவான் 14:21** இவ்வாறாக கூறியுள்ளார். **"என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான். என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான். நானும் அவனில் அன்பாயிருந்து அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்"** என்றாகும். உங்கள் வாழ்க்கை தேவ ஆசீர்வாதம் பெற்று உயருவதாக என வாழ்த்துகிறேன். **வெற்றிச் சிறந்த நந்நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் இஸ்ரவேலின் தேவன் அதே போன்று என்னுடைய தேவனாக இருக்கிறீர்கள். நீங்கள் என்னில் வாசம் பண்ணுவதால் உங்களைத் வேதனைப்படுத்தாது எனக்கு உதவி செய்யுங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்." (1 யோவான் 4:13)

ஜீவ மன்னா

பெப்ரவரி **08** ஞாயிறு

## பரலோக பூலோக ஆசீர்வாதங்களுக்கு இயேசுவே வாசல்!

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் அதி: 16 – 17

**"நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்."** (பரி.யோவான் 10:9)

அருமையான தேவ ஜனங்களே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் **இன்றைய காலைப் பொழுதில் தேவனின் புதுபெலனில் நீங்கள் அனைவரும் நிரப்பப்பட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** நீங்கள் ஜீவ மன்னா தின மஞ்சரியை கையில் வைத்து வாசிக்கின்ற வேளை தேவன் பேசுகின்ற வசனங்களில் நீங்கள் பெலன் பெறுவதை தேவன் காண வேண்டுமென்பதே அவரது பிரியமாயிருக்கிறது. இன்றைக்கு 4 வருடங்களுக்கு முன்னதாக **ஜீவ மன்னா என்ற பெயரில் தேவ வசனங்கள் அடங்கிய மாதந்த மஞ்சரியை தயாரித்து வெளியிட தேவன் எனக்கு வழியைக் காண்பித்தார்.**

தேவ பிள்ளைகளே! ஆகையால் தினந்தோறும் இந்தத்தின மஞ்சரிக்கூடாக உங்கள் ஆத்துமா போஷிக்கப்பட்டு தேவ வசனத்திற்கூடாக உங்கள் வாழ்க்கை சரியான பாதையில் செல்கின்றது என்பதனைக் குறித்து அனேக சாட்சிகளைப் பெற்றுள்ளோம். ஆகையால் **நீங்கள் மிகவும் அதிரஷ்டசாலிகள்! பரி.யோவான் 10:9இல் இயேசுகிறிஸ்து எங்களுக்குக் கூறுவது "நானே வாசல் என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான் அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்"** என்றாகும். வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், **இயேசுகிறிஸ்து நானே வாசல் என்று கூறுவது ஏன்?** அதற்கூடாக நாங்கள் பிரவேசிப்பது எங்கே என நீங்கள் சிந்திக்கக் கூடும். இதில் வெளிப்படும் கருத்து எங்கள் பரலோக தேவ பிதாவண்டையில் சமீபித்து நெருங்க வழியைத் திறந்து தருவது இயேசுகிறிஸ்துவேயாகும். ஏனென்றால் **யோவான் 14:6இல் "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான்"** என்று இயேசுகிறிஸ்து எங்களுக்கு கூறியுள்ளார்.

தேவ பிள்ளைகளே! தேவனது நாமத்தை விசுவாசித்து அவரை ஏற்றுக் கொள்ளும் அனைவரும் பரலோகப் பிதாவின் சொந்த பிள்ளைகளாவார்கள். உலகமும் அங்கே உள்ள அனைத்தையும் படைத்த தெய்வம் என்றும் **அவரே பரலோகத்திற்கும், பூலோகத்திற்கும் தேவனாக இருக்கின்றார்.** என்பதையும், இயேசுகிறிஸ்துவுக்கூடாக தேவனை அடைகின்ற ஒவ்வொருவரும் பரலோக ஆசீர்வாதங்களையும் பூமிக்குரிய அனைத்து ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிந்துக் கொள்ளுங்கள். **நீங்களும் ஆசீர்வாத வாசல் வழியாக பிரவேசியுங்கள். ஆசீர்வாதத்தின் நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! உங்களை நெருங்கும் வாசல் இயேசுவே என்பதை அறிந்துக் கொண்டேன் நான் இன்று உங்களண்டையில் வருகின்றேன். பரலோகத்திலும், பூமியிலும் அனைத்து ஆசீர்வாதங்களையும் எங்களுக்குக் கொடுப்பாராக! இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் .–ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடைகொள்ளுகிறதுமில்லை." (அப்போஸ்தலர் 17:25)

ஜீவ மன்னா
பெப்ரவரி 09
திங்கள்

# சமீபத்திற்கும் தூரத்திற்கும் ஒரே வண்ணமாக கிரியை செய்யும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
யாத்திராகமம் அதி: 18 – 19

**"நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்."** (எரேமியா 23:23)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்று வெற்றிகரமான நாளாக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவன் அனைத்து பூலோக வாசிகளினதும் தேவனாவார். ஏனென்றால் தேவன் எப்போதும் எவ்விடத்தில் ஒரே வண்ணமாக கிரியை செய்கின்ற தேவன் **"எவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக் கூடுமோ எனக் கர்த்தர் கேட்கிறார்."** ஆகையால் உலகில் வாழ்கின்ற அனைத்து மனிதர்கள் மத்தியில் தேவனின் சொந்த பிள்ளைகளாக உலகில் வேறுபிரித்து எங்கள் ஒவ்வொருவரையும் குறித்து அவரது விஷேட கவனம் எல்லா வேளையிலும் **எம்மை நோக்குவதால் நாம் ஆசீர்வாதம் பெற்ற ஜனங்களாவோம்.**

தேவ பிள்ளைகளே! மேலே குறிப்பிட்ட **எரேமியா 23:23** இல் கூறப்படுகிறதாவது, **"நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன் தூரத்திற்கும் தேவன் அல்லவா என கர்த்தர் சொல்கிறார்."** உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! இன்னுமாக **எரேமியா 23:18**இல் கர்த்தருடைய ஆலோசனையில் கூட நின்று அவருடைய வார்த்தையைக் **கேட்டறிந்தவன் யார்?** அவருடைய வார்த்தையைக் கவனித்துக் கேட்டவன் யார் என்று கேட்கிறார். ஆகையால் உலகில் வாழ்கின்ற மற்ற மனிதர்களைப் பார்க்கிலும் தேவனைக் குறித்தறிந்துக் கொண்ட எங்கள் ஒவ்வொருவருக்கும் தேவனிடம் கிடைக்கின்ற **கருணை, அநுக்கிரகம், அன்பு அளவிட முடியாததாயிருக்கிறது.** நீங்கள் தேவனின் கட்டளைகளுக்கு கீழ்படிந்து பரிசுத்த வாழ்வு வாழ்வீர்களாயின் நீங்கள் எங்கே, எப்படி இருப்பினும் **தேவனை நோக்கி கூப்பிடும் போது தேவன் உங்களுக்கு பதில் கொடுப்பார்.** அப்படியே நீங்கள் வேறு யாருக்காயினும் மத்தியஸ்தம் பண்ணி தேவனை நோக்கி ஜெபிப்பீர்களாயின் தேவன் சமீபத்திற்கும், தூரத்திற்கும் தேவனானபடியால் அந்தநபர் எங்கே, எவ்விடத்தில் இருந்தாலும் **தேவன் அவருக்கு பதில் கொடுப்பார்.**

தேவ பிள்ளைகளே! **சங்கீதம் 139:7**இல் தாவீது இராஜா கூறுவது **"உங்கள் ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்"** என்றாகும். நீங்கள் எங்கே இருந்தாலும் தேவன் உங்களைக் காண்கிறார். நீங்கள் கூப்பிடும் வேளை **தேவன் உங்களுக்கு பதில் கொடுப்பாராக!** இன்றும் அனைத்து பூலோக வாசிகளினதும் தேவன் உங்களோடு இருக்கிறார். **இன்று வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! நீங்கள் சமீபத்திற்கும், தூரத்திற்கும் தேவனானவர் நான் எங்கே எப்படி இருப்பினும் நீங்கள் என்னைக் கண்டு எனது குரல் கேட்டு பதில் கொடுக்கிற தேவனாகையால் ஸ்தோத்திரம் இயேசுவின் நாமத்தில். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"தூரமாயிருக்கிறவர்களுக்கும் சமீபமாயிருக்கிறவர்களுக்கும் சமாதானம் சமாதானம் என்று கூறும் உதடுகளின்பலனைச் சிருஷ்டிக்கிறேன்; அவர்களைக் குணமாக்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (ஏசாயா 57:19)

ஜீவ மன்னா

பெப்ரவரி 10 செவ்வாய்

# தேவ ஆசீர்வாதம் பெற நீங்கள் செய்ய வேண்டியதென்ன?

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் அதி: 20 - 21

**"இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்."**
(பரி.யோவான் 11:40)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களுக்கொரு ஆசீர்வாதமான நாள் உதயமானபடியால் ஸ்தோத்தரிக்கிறேன்.** இரட்சகரான இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து பின்பற்றும் நாங்கள் தேவனின் பிள்ளைகளாக வல்லமை பெறுகின்றமை ஆச்சரியமான செயல் என்பதை நாம் அறிவோம். ஏனெனில் **விசுவாசம் மனிதர்களின் உள்ளத்தில் ஏற்படுவதொன்றாகும்.** ஆனாலும் அதை செயல் மூலமாக இன்னுமொருவருக்கு உறுதிப்படுத்த முடியும்.

தேவ பிள்ளைகளே! மேற் கூறப்பட்ட **யோவான் 11:40**இல் தேவ வசனத்திற்கூடாக இயேசுகிறிஸ்து கூறுவதென்னவெனில் நீங்கள் **விசுவாசித்தால் தேவ மகிமையைக் காண்பீர்கள் என்றாகும்.** அன்று தேவன் அப்படியாகக் கூறியது லாசருவின் சகோதரியான மார்த்தாளுக்காகும். ஏனெனில் **"அவனுடைய சகோதரனின் உயிரற்ற உடல் வைக்கப்பட்டிருந்த கல்லறையில் இருந்த கல்லை இயேசு கல்லை எடுத்துப் போடுங்கள்"** என்றார். இயேசுகிறிஸ்து **பரி.யோவான் 11:40**இல் **"பரலோக பிதாவானவரை நோக்கி ஜெபித்து லாசருவே வெளியே வா என்று. உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார்."** அப்பொழுது **மரித்த லாசரு வெளியே வந்தான்.** அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது அவன் முகமும் சீலையில் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார், எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! இதில் நாம் அறிந்து கொள்வது என்னவென்றால் ஆத்மீக பிள்ளைகளாகிய நாங்கள் தேவன் பேரில் வைக்கும் **விசுவாசம் எவ்வளவு ஆழமானதாக இருக்க வேண்டும் என்பதையே ஆகும்.** ஏனெனில் குமாரனான இயேசுவின் நாமத்தில் நாங்கள் பரலோக பிதாவிடம் ஒன்றைக் கேட்கும் போது நாங்கள் அதைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் எங்களுக்கு **தேவன் பேரில் ஆழமான விசுவாசம் வேண்டும்.** உங்கள் வாழ்க்கையில் தீர்வே கிடைக்காத பிரச்சினை, இன்னல்கள் இருப்பின் நீங்கள் இன்று இந்த தேவ வசனத்தில் கூறியுள்ள பிரகாரம் பரலோக பிதாவானவரிடம் **நீங்கள் விசுவாசத்தோடு அவைகளுக்கு பதில் கேட்டு ஜெபியுங்கள். தம்மை நோக்கி விசுவாசத்தோடு ஜெபிப்பவர்களை ஒரு போதும் வெட்கப்படவிடமாட்டார். அவர்களைக் கைவிடமாட்டார். தேவன் உங்களுக்கு ஏற்ற பதிலை தருவாராக! இன்று வெற்றிகரமான நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! உங்களில் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. நான் விசுவாசத்தோடு எதைக் கேட்பினும் குமாரனுக்கூடாக உங்கள் நாமம் மகிமையடையும்படியாக இன்றும் நீங்கள் அவைகளை வாய்க்கப் பண்ணி பதில் கொடுப்பதால் ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்." (பரி.யோவான் 20:29)

ஜீவ மன்னா
பெப்ரவரி 11
புதன்

## வாழ்வில் உயர்வடைய நீங்கள் செய்ய வேண்டியதென்ன?

இன்றைய வேதவாசிப்பு
யாத்திராகமம் அதி: 22 – 23

**"தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்."**
(பரி.லூக்கா 14:11)

அருமையான தேவ ஜனங்களே! ஜீவிக்கின்ற **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் தேவன் அளித்த கிருபையின் நாளிலே ஜெயம் பெற்று வாழும்படியாக வாழ்த்துகின்றேன்.** எங்கள் இரட்சகர் இயேசுகிறிஸ்து பரலோகத்தினின்று இப்பூமியில் அவதரித்தது பெத்லகேம் என்னும் சிறிய கிராமத்தில் என்பதை நாம் அனைவரும் அறிவோம். இயேசுகிறிஸ்து பிதாவின் குமாரனாக இருந்தாலும் **எங்களுடைய தகுதியை பாராது தேவனண்டையில் எம்மைக் நெருங்கிச் சேர்த்துக் கொள்ளும்படியாக உலகில் அவதரித்தார்.** பரலோக தேவனது சித்தத்தை நிறைவேற்றும் பொருட்டு உலகிற்கு அனுப்பப்பட்ட குமாரன் இப்பூமியில் மகிமை அடைந்தார்.

தேவ பிள்ளைகளே! எங்கள் இயேசுகிறிஸ்து பிதாவானவரின் விருப்பத்தை இப்பூமியில் நிறைவேற்றினார். எப்போதும் தமது பிதாவானவரை மகிமைப்படுத்துவதிலேயே செயல்பட்டார். **"நான் சுயமாய்ப் பேசவில்லை. நான் பேச வேண்டியது இன்னதென்றும், உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதா எனக்குக் கட்டளையிட்டார்."** என்றும் கூறியுள்ளார். இயேசுவைக் காட்டிக் கொடுக்கின்ற வேளை வந்தபோது "பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது மகிமைப்படுத்தினேன். இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று என்று வேதாகமத்தில் **பரி.யோவான் 12:28**இல் எழுதப்பட்டுள்ளது. அதன் பின்னர் இயேசுவை **"யூதாஸ் எனும் சீஷர்களுள் ஒருவனான மனிதனால் காட்டிக் கொடுக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டு மரணமடைந்தார்."** தேவ பிதாவின் மூலமாக மூன்றாம் நாள் மரித்தவாக்கிடையில் உயிர்த்தெழுந்து தேவனின் நாமத்தை மகிமைப்படுத்தினார்.

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து **இறுதி இராப்போஜனம் உண்ண முன்னதாக சீஷர்களின் பாதங்களைக் கழுவித் துடைத்து தனது கீழ்படிவை சீஷர்களுக்கு எடுத்துக் காட்டினார்.** அதன் பலனாக தேவன் கூறியது ஏனென்றால் நான் உங்களுக்குச் செய்ததைப் போன்று நீங்களும் செய்யும்படியாக எடுத்துக்காட்டாகச் செய்தேன் என்று கூறினார். ஆகையால் மனிதர்கள் முன்னிலையில் உங்களை உயர்த்திக் காட்டவும் எல்லோருக்கும் மேலானவராகவும் தெரிய வேண்டுமென செயல்படாதீர்கள். **மற்ற மனிதர்களை உயர்வாகக் கருத்திற் கொண்டு கௌரவப்படுத்துங்கள்.** அவர்கள் முன்னிலையில் உங்களைத் தாழ்த்திக் கொள்ளுங்கள். அப்பொழுது **தேவன் உங்களை தேவனுக்குள் உயர்த்துவார். மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் குமாரன் இயேசுகிறிஸ்து ஆத்மீக வாழ்விற்கு எடுத்துக் காட்டியாக வாழ்ந்தார். உங்களுக்குள் என் வாழ்க்கை உயர்வடைய தேவன் கிரியை செய்தது போல என்னை கீழ்படிவான வாழ்க்கை வாழ உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்." (பரி.யோவான் 13:17)

ஜீவ மன்னா

பெப்ரவரி **12**

வியாழன்

## பாவங்கள் பிரச்சினைகளுக்கு முதல் காரணம் என எண்ணாதீர்கள் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் அதி: 24 - 25

**"தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்."**
(பரி.லூக்கா 14:11)

கிறிஸ்துவுக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவனாகிய நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் **இன்றைய நாளில் சத்துருவின் அனைத்து சவால்களிலும் அதிவிஷேசித்த ஜெயத்தை பெறும்படியாக வாழ்த்துகின்றேன்.** இயேசுகிறிஸ்து மனுவுருவில் உலகிற்கு வந்தது பாவத்திலிருந்து மனிதர்களை மீட்டுக் கொள்வதற்காகும். **ரோமர் 3:23,24**இல் எல்லாரும் பாவஞ் செய்து மகிமையற்றவர்களாகி **இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.** இன்னுமாக **பரி.யோவான் 3:17**இல் உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகிற்கு அனுப்பாமல் அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார் என்றும் எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! படைப்பின் தேவனைக் குறித்து அறியாமையினால் **மனித கரங்களில் நிகழும் பாவங்கள், குறைகள் காரணமாக அவர்கள் தேவன் முன்னிலையில் கீழ்படியாதவர்களாகவும், பாவிகளாகவும் இருக்கின்றார்கள்.** ஆகையால் பரிசுத்த தேவன் தனது சொந்த குமாரனின் இரத்தத்தினால் எம்மைக் கழுவி பரிசுத்தப்படுத்தி பரிசுத்த பிள்ளைகளாக்கினார். ஆனாலும் ஒரு நாள் பிறப்பிலிருந்து குருடனாக இருந்த ஒரு மனிதனைக் கண்டு இயேசுவின் சீஷர்கள் தேவனிடம் கூறியது ரபீ இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம் இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள். **அப்பொழுது இயேசுகிறிஸ்து அவர்களுக்கு பிரதியுத்தரமாக அது இவன் செய்த பாவமுமல்ல தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான் என்று கூறினார். உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** ஆனாலும் நீங்கள் ஏதாவதொரு பிரச்சினையின் மத்தியில் வேதனைப்படுகிறீர்களா? அப்படியில்லாவிடின் உங்கள் சரீரத்தில் ஏதாவதொரு நோயின் காரணமாக நோயினால் உபத்திரவப்படுகிறீர்களா?

தேவ பிள்ளைகளே! நீங்கள் அப்படியாக இருப்பவரெனின் உங்களைக் காண்கிற மனிதர் உங்கள் தேவனுக்கு விரோதமாகச் நீங்கள் செய்த ஒரு பாவத்தின் காரணமாக பிரச்சினைகளினால் நெருக்கப்பட்டு அதிலிருந்து மீள முடியாமல் இருப்பதாகக் கூறி அவமானப்படுத்தியிருக்கலாம். அல்லது உங்கள் பாவத்தின் காரணமாக நீங்கள் நோயுற்று உபத்திரவப்படுகிறீர்களென குறை சொல்லலாம். ஆனாலும் **நீங்கள் துக்கப்படாதீர்கள்.** அவைகள் உங்களுக்கு நேரிடுவது நீங்கள் பாவியான காரணத்தினால் அல்ல. தேவனது வல்லமையான கிரியைகள் உங்களுக்குள் நிறைவேறும் பொருட்டு என்று அறிந்து **உங்கள் மனதை தைரியப்படுத்திக் கொள்ளுங்கள். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! எனக்கு பிரச்சினைகள் உபத்திரவங்கள் எல்லா வேளை வருவது எனது பாவங்கள் காரணமாக இல்லையென்று நான் அறிந்துக் கொண்டேன். நீங்கள் என்னோடிருந்து எனக்குள் உங்கள் கிரியைகளை மற்றவர்கள் காணும்படியாகச் செய்யுங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன். என்றார்." (பரி.யோவான் 16:33)

**ஜீவ மன்னா**
**பெப்ரவரி 13 வெள்ளி**

# நீங்கள் தீமைகளிலிருந்து விலகி தூரமாயிருங்கள் !

**இன்றைய வேதவாசிப்பு**
யாத்திராகமம் அதி: 26 – 27

**“நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது. பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்கவேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும்,...”** (1 யோவான் 3:11,12)

அன்பான அளவற்ற தேவ அன்பினால் சமீபித்து நெருங்கி ஜீவிக்குமாறு **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவ பிதாவானவர் எங்களுக்குக் காட்டுகின்ற அன்பு எவ்வளவு என்று எங்களுக்கு வெளிப்படுத்தியுள்ளதாவது, நாம் ஒவ்வொருவரும் நாங்கள் உலகில் ஜீவித்தது எப்படி என நன்றாக அறிந்துக் கொண்டும் **எங்களை பாராமுகமாயிராமல் எங்களைத் தன்னிடத்தில் அழைத்துக் கொண்டமையேயாகும்.** அப்படியெனில் நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார் என **ரோமர் 5:8**இல் எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! நாங்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பதால் தேவனது **தேவ ஆவியானவர் எங்களுக்குள் இறங்கி வாசம் பண்ணுவதை நாம் அறிவோம்.** ஏனெனில் தேவனிடமிருந்து வருகை தந்த இயேசுகிறிஸ்து தேவ குமாரன் என ஏற்றுக் கொள்வீர்களாயின் எங்களுக்குள் தேவன் வாசம் பண்ணுகிறார் என்றும் நாம் தேவனுக்குள் இருக்கின்றோம். என்றும் வசனம் கூறுகிறது. தேவனுடைய ஆவியானவர் எங்களுக்குள் வாசம் பண்ணுவராகில் **தேவனது சுபாவம் எங்களுக்குள் இருக்க வேண்டுமென்பதை நாம் அறிவோம்.** மேலே குறிக்கப்பட்ட பிரதான தேவ வசனத்தில் கூறுகின்றதாவது **“நாம் ஒருவரொடொருவர் அன்பு கூர வேண்டுமென்பதே நீங்கள் ஆதிமுதல் கேள்விப்பட்ட விசேஷமாயிருக்கிறது.”** பொல்லாங்கனால் உண்டாயிருந்து **தன் சகோதரனைக் கொலை செய்த காயீனைப் போலிருக்க வேண்டாம்.** அதன் விளக்கம் என்னவென்றால் அன்பான தெய்வம் தேவ ஆவியானவர் எங்களுக்குள் இருப்பதால் தேவனின் அன்பு எங்களுக்குள் நிலைத்திருக்க வேண்டும் என்பதாகும்.

தேவ பிள்ளைகளே! ***தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைப் பாதகனாயிருக்கிறான்.*** மனுஷ கொலைப்பாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள். என்று **1 யோவான் 3:15**இல் எழுதப்பட்டுள்ளது. ஆகையால் ஆத்மீக பிள்ளைகளான எங்களுக்குள் தேவ அன்பைத் தவிர தீமைகள் இருக்க முடியாது. தேவனானவர் தீமை செய்பவர்களுக்கு விரோதமாக செயல்புரிவதோடு நன்மைகள் செய்பவர்களுக்கு **தேவனின் கருணை, உண்மை என்பவற்றை அளித்து உயர்த்துகின்றார்.** ஆகையால் ***நீங்கள் தேவ அன்பில் நிலைத்திருந்து ஆசீர்வாதம் பெற்றவர்களாக ஜீவியுங்கள். இன்று வெற்றிச் சிறந்த நாள்!***

**ஜெபம்**

என் தேவனே! என்னை நீங்கள் சொந்த பிள்ளையாக மாற்றி என்னை ஆசீர்வாதம் பெற்ற பிள்ளையாக மாற்றுங்கள். அதற்கு விரோதமாக செயல்படுகின்ற தடைகளை வைக்கின்ற சாத்தானிடமிருந்து என்னைக் காப்பாற்றுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

“ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.” (யாக்கோபு 4:7)

ஜீவ மன்னா
பெப்ரவரி 14
சனி

# உங்கள் காரியங்கள் ஏற்ற காலத்தில் நிறைவேற்றப்படும் !

இன்றைய வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 28 – 29

**"எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக்கொண்டிருக்கிறது; ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர்."**
(சங்கீதம் 145:15)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் **இன்றைய நாளில் உங்களை மனமகிழ்வோடும் ஆவியானவரின் புது பெலனோடும் வாழ்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** உலகில் மனிதர்களது சிருஷ்டிப்பின் தேவனானவர் பரலோகத்தில் வாசம் பண்ணுகின்ற தேவனுமாவார். அவரைக் குறித்து அறிந்துக் கொண்ட நாங்கள் **அதிர்ஷ்டக்காரர்களாவோம்**! ஏனெனில் அவர் மாம்சமான யாவருக்கும் கர்த்தர் என்பதும், அவரண்டை செல்லுகின்ற அத்தோடு அவரை முழு உள்ளத்தோடு ஏற்றுக் கொள்பவர்க்கு **தேவனது பரிபூரண ஆசீர்வாதங்களும் சொந்தமாகின்றது என்பதும் வேத வசனத்தில் எழுதப்பட்டுள்ளது.**

தேவ பிள்ளைகளே! "**இவ்விதமான சீரைப் பெற்ற ஜனம் பாக்கியமுள்ளது. கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது.**" என்று **சங்கீதம் 144:15**இல் எழுதப்பட்டுள்ளது. அது மாத்திரமின்றி **சங்கீதம் 145:15**இல் கூறப்படுகிறதாவது எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது. ஏற்ற வேளையில் நீர் அவைகளுக்கு ஆகாரங் கொடுக்கிறீர் என்பதால் **உங்கள் உள்ளம் கலங்காமலிருப்பதாக**! உங்கள் வாழ்வில் இவ்வளவு காலம் நிறைவேறாத காரியங்களைக் குறித்து **கவலைப்படாதீர்கள். நீங்கள் உங்கள் காரியங்களைக் தேவனிடம் ஒப்புவித்து ஜெபியுங்கள்.** ஆனாலும் நான் இவ்வளவு காலமாக அக்காரியங்களுக்காக ஜெபிக்கின்றேன் எனக்கு இன்னும் **தேவனிடமிருந்து பதில் கிடைக்கவில்லையே என நீங்கள் சிந்திக்கின்றீர்களா?** ஆனாலும் நீங்கள் உங்கள் உள்ளத்தை அதைரியப்படுத்திக் கொள்ளாதீர்கள். உங்களுக்கு ஏற்ற காலத்தில் அவைகளை பெற்றுத்தர தேவன் கிரியை செய்வார்.

தேவ பிள்ளைகளே! அவர் சகலத்தையும் அதினதில் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார். உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார். ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்தம் மட்டும் செய்துவரும் கிரியை மனுஷன் கண்டுபிடியான் என தேவ வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. **பிரசங்கி 3:11** ஆகையால் "**தேவன் உங்கள் காரியங்களை நிறைவேற்ற மாட்டார் என்றும், உங்கள் ஜெபங்களை தேவன் கேளாமல் இருப்பார் என்றும் எண்ணாதீர்கள்.**" நீங்கள் நினைத்துக் கூட பார்க்க முடியாதபடி உங்கள் காரியங்களை நிறைவேற்ற தேவனுக்கு முடியும். ஆனாலும் **நீங்கள் குழப்பமடையாது, தேவனை விசுவாசத்தோடு கண்ணோக்குங்கள். ஜெயத்தின் நாள்**!

ஜெபம்

என் தேவனே! நீங்கள் மாம்சமான யாவரையும் படைத்த தேவன்.
எல்லோரையும் பராமரிக்கின்ற தேவன் நீங்கள் எனது காரணங்களை ஏற்ற
காலத்தில் நிறைவேற்றுவதால் நன்றி! என்னை ஆசீர்வதியுங்கள்.
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு." (பிரசங்கி 3:1)

ஜீவ மன்னா

பெப்ரவரி 15

ஞாயிறு

## நீங்கள் இயேசுகிறிஸ்துவின் சுதந்தரவாளிகள் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் அதி: 30 – 31

**"தோட்டக்காரர் குமாரனைக் கண்டபோது: இவன் சுதந்தரவாளி; இவனைக் கொன்று, இவன் சுதந்தரத்தைக் கட்டிக்கொள்வோம் வாருங்கள் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டு; அவனைப் பிடித்துத் திராட்சத்தோட்டத்திற்குப் புறம்பே தள்ளிக் கொலைசெய்தார்கள்."** (பரி.மத்தேயு 21:38,39)

கிறிஸ்து இயேசுவுக்குள் நித்திய மகிமைக்கு அழைக்கப்பட்ட தேவ பிள்ளைகளே! **வல்லமையான இயேசு என்னும் நாமத்தினால் இப்புதிய நாள் மனமகிழ்வின் நாளாக அமையுமாறு வாழ்த்துகின்றேன்.** எங்களை படைத்தவராகிய தேவன் எம்மை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை அவரது கிரியைகள் வெளிப்படுத்துகிறது. **எம்மை அவரிடம் நெருங்கி சேர்த்துக் கொள்ளும்படியாக இயேசுகிறிஸ்து இப்பூமியில் வெளிப்பட்டார்.**

என் அன்பு தேவ பிள்ளைகளே! வீட்டெஜமானாகிய ஒரு மனிதன் இருந்தான் அவன் திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி அதைச் சுற்றிலும் வேலியடைத்து, அதில் ஒரு ஆலையை நாட்டி கோபுரத்தையும் கட்டி தோட்டக்காரருக்கு அதைக் குத்தகைக்கு கொடுத்து விட்டு புறதேசத்துக்கு போயிருந்தான். அதன் கனி தரும் காலம் சமீபித்த போது அதின் கனிகளை வாங்கிக் கொண்டு வரும்படி **தன் ஊழியக்காரர்களை தோட்டக்காரரிடத்தில் அனுப்பினான். "தோட்டக்காரர் அந்த ஊழியக்காரனைப் பிடித்து ஒருவனை அடித்து, ஒருவனை கொலை செய்து, ஒருவனை கல்லெறிந்து கொன்றார்கள். பின்னும் முந்தினவர்களிலும் அதிகமான வேறே ஊழியக்காரரை அனுப்பினான். அவர்களையும் அப்படியே செய்தார்கள். கடைசியிலே அவன் என் குமாரனுக்கு அஞ்சுவார்கள் என்று சொல்லி தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான். அவனையும் கொலை செய்தார்கள்." என்று பரி.மத்தேயு 21:38,39**இல் வசனங்கள் கூறுகிறது.

தேவ பிள்ளைகளே! நாமனைவரும் ஆண்டவருக்கு சொந்தமான சொத்துக்களும், பொக்கிஷமாகவும் இருப்பதால் எம்மை தம்மிடமாய் அழைத்துக் கொள்ளும்படியாக அநேக தேவ ஊழியக்காரர்களை எழுப்பினார். ஆயினும் திராட்சை தோட்டக்காரரை போன்ற உலகத்தின் அதிபதியாக சத்துருவானவன் மனித உள்ளங்களை கெடுத்து அவர்களுக்கு துன்பங்களை உண்டு பண்ணினான். இதனால் தேவன் தனது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை உலகிற்கு அனுப்பினார். திராட்சை தோட்ட சொந்தக்காரனின் மகனை கண்ட தோட்டக்காரர்கள் அவனே தோட்டத்திற்கு உரிமையுள்ளவன் என அறிந்து அவனை கொன்று உரிமையை அபகரித்துக் கொள்ள செயல்பட்டது, போல **அவருக்கு சுதந்தரவாளிகளாகிய தேவ பிள்ளைகளை தமக்கு உடமையாக்கிக் கொள்ள முயற்சித்தான்.** ஆயினும் தேவ கிருபை தமது பிள்ளைகளுக்கு குறையாது பொழியும் கர்த்தர் தமது ஒரே குமாரனை மரணத்திலிருந்து உயிர்த்தெழச் செய்து இன்றும் அனேகரை கிறிஸ்துவுக்கூடாய் அழைத்துக் கொண்டிருக்கிறார். உங்களையும் அழைத்து இயேசுகிறிஸ்துவுக்கு உரிமையுள்ளவர்களாக மாற்றியுள்ளார்.

ஜெபம்

என் அன்பு நேசத் தகப்பனே! குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் என்னையும் அழைத்து அவருக்கு உரிமையுள்ள பிள்ளையாக மாற்றியபடியால் நன்றி! என்னை தனக்கு சொந்தமாக்க முனையும் சாத்தானுடைய பொல்லாப்புக்களை நீக்கி என்னை காத்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்." (பரி.யோவான் 10:16)

ஜீவ மன்னா

பெப்ரவரி 16 திங்கள்

# நீங்களும் மிகுந்த கனி கொடுக்கும் மரமாய் மாறுங்கள் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் அதி: 32 – 33

**"அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன்,"** (பரி.லூக்கா 13:8)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! சர்வ வல்லமையுள்ளவரும் ஜீவிக்கின்றவராய் எம் மத்தியில் கிரியை செய்யும் **இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் இப் புதிய நாள் மனமகிழ்ச்சியின் நாளாய் அமையுமாறு வாழ்த்துகின்றேன்.** எம் பரலோக பிதாவே தமது ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்கூடாய் எம்மை தம்மிடம் அழைத்தது எமது வாழ்வை செழிப்பாக்கி பெருகச் செய்யும்படியாகவே. இதை **பரி.யோவானின் 3:2**ம் வசனத்தில் தெளிவாக இப்படி வெளிப்படுத்துகிறது. **"பிரியமானவனே! உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்"** என்று.

**பரி.யோவான்** எனும் நிருபத்தில் யோவான் நேசிக்கிற அவருக்கு பிரியமான காயுவு என்னும் உடன் ஊழியக்காரனுக்கு எழுதப்பட்டது. என்பதை முதல் வாக்கியம் உறுதிப்படுத்துகிறது. இவ் வார்த்தைகள் ஆண்டவரால் தேவ ஆவியானவருக்கூடாக யோவான் மூலம் உரைக்கப்பட்டது. ஆகையால் இவ் வாக்கியம் காயிவுக்கு மாத்திரமல்ல எமக்கும் அது பொருந்தும். **எம் ஆத்துமா செழிப்படைந்து அதன் மூலம் சகலவற்றிலும் நலமே பெற வேண்டும் என்பது பரமதகப்பனின் விருப்பமாகும்.** உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! மேலே தரப்பட்ட எம் செய்தியின் ஆரம்ப வசனம் **பரி.லூக்கா 13:8**இல் கூறுகிறது. அதற்கு அவன் ஐயா இந்த வருஷமும் இருக்கட்டும் நான் இதைச் சுற்றிலுங் கொத்தி எருப்போடுவேன் என்றான். ஒரு திராட்சை தோட்டத்தின் சொந்தக்காரன் திராட்சை தோட்டத்தின் மத்தியில் இருந்த அத்தி மரத்திலே மூன்று வருஷமாய் கனியைத் தேடி ஒன்றையும் காணாதபடியால் தோட்டக்காரனிடம் கூறினான் அதைக் கேட்ட தோட்டக்காரன் தன் எஜமானுக்கு சொன்ன பதில் இதுவாகும். **"இதை வெட்டிப் போடு இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது?"** என்றாகும்.

அன்பு பிள்ளைகளே! தோட்டக்காரன் திராட்சை தோட்ட சொந்தக்காரரிடம் இந்த வருஷம்மட்டும் இருக்கட்டும் நான் சுற்றிலும் கொத்தி எருபோடுவேன். அப்போது அது கனிகொடுக்கும் என்று அவனது உள்ளத்தில் ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. இது போலவே **திராட்சை தோட்டச் சொந்தக்காரராக எமது பரலோக தகப்பன் இருக்கிறார். நாம் கனி கொடுக்கும்வரை எம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார்.** நீங்கள் இரட்சிப்படைந்து பல வருடங்கள் கடந்தவராயின் உங்கள் ஆத்மீக வாழ்வைக் குறித்து ஆராய்ந்தறியுங்கள். இன்னும் உங்கள் வாழ்க்கை கனியற்றதாக இருக்கிறதா? அப்படியாயின் உங்கள் பாதுகாவலனாகிய இயேசுகிறிஸ்து தோட்டக்காரராக இந்த ஒரு வருஷத்திலாவது கனி கொடுப்பீர்கள் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆகையால் **உங்கள் வாழ்க்கையை கனி கொடுக்கும்படியாய் மாற்றுங்கள். ஆசீர்வாதத்தின் நாள்!**

**ஜெபம்**

அன்பான என் இயேசுவே ! மெய்யான திராட்சை செடியான உங்கள் குமாரனாகிய இயேசுவுக்குள் நிலைத்திருந்து அதிக கனி கொடுக்கும் கிளையாக மாற்றி என்னை ஆசீர்வதிக்குமாறு இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்." (பரி.யோவான் 15:8)

ஜீவ மன்னா

பெப்ரவரி 17

செவ்வாய்

## விசுவாசமுள்ள வார்த்தைகள் கிரியைகளாக வெளிப்படும் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம்

அதி: 34 – 35

**"கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்."**

(1 இராஜாக்கள் 17:1)

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்பு கூறுகிற தேவ பிள்ளைகள் யாவரோடும் **அவரது கிருபை காலைத் தோறும் புதிய ஆசீர்வாதங்களால் நிரம்ப பிரார்த்திக்கின்றேன்.** தேவனுடைய பிள்ளைகளே! நாமனைவரும் விசுவாசத்திலே நிலை நிற்க வேண்டும். எம் உள்ளங்கள் விசுவாசத்தால் உறுதிபட வேண்டும் என தேவன் கூறியிருக்கிறார். **எபிரேயர் 10:38**இல் **"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் பின் வாங்கிப் போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாயிராது"** என்கிறார். அதுமாத்திரமல்ல **பரி.லூக்கா 18:8**இல் தேவ வார்த்தை இவ்வண்ணமாக கூறுகிறது ......**"ஆகிலும் மனுஷகுமாரன் வரும் போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ எனவும்"** என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கிறார்.

அன்பு தேவ பிள்ளைகளே! **விசுவாசமில்லாமல் தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள முடியாது.** எம் வாழ்க்கையில் காணப்பட்ட பாவங்கள், சாபங்கள் நீங்கியது தேவ குமாரன் இயேசுகிறிஸ்துவை நாம் விசுவாசித்து ஏற்றுக் கொண்டபடியினால் அல்லவா? ஆகையால் விசுவாசம் எமது உள்ளத்திலிருந்து செய்கைகள் மூலம் வெளிப்படும் போது தேவ ஆசீர்வாதத்தை பெறுவது நிச்சயம். இன்றைய செய்தியின் தலைப்பு வசனம் **1 இராஜாக்கள் 17:1 தேவ மனுஷனான எலியா தீர்க்கதரிசியின் விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது.** யூதாவின் ராஜாவாகிய உம்ரியின் புத்திரனாகிய ஆகாப் இஸ்ரவேலின் ராஜாவாகிய தனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். ஒரு விக்கிரகத் தோப்பை வைத்து இஸ்ரவேலின் தேவனுக்கு கோபம் உண்டாக்கும்படி செய்தான். **தேவனை நேசிக்கும் எலியா தீர்க்கதரிசி இப்படி ஆகாப் ராஜாவுக்கு கூறி, தேசத்தில் மழை இல்லாது போகும்படி செய்தார்.**

தேவ பிள்ளைகளே! **"இஸ்ரவேலின் தேவனானவர் மூன்று வருடங்களுக்குப் பின்னர் எலியாவை அழைத்து நீ போய் ஆகாபுக்கு உன்னை காண்பி நான் தேசத்தின் மேல் மழையைக் கட்டளையிடுவேன்" என்றார்.** எலியா ஆகாப் ராஜாவை சந்தித்து தேவ வார்த்தைகளை வெளிப்படுத்தினார். எலியாவின் நாவில் புறப்பட்ட வார்த்தைகளின்படி மழையற்றுப் போன **சமாரியா தேசம் கொடிய பஞ்சத்திற்கு இலக்காயிருந்தது.** இதைக் குறித்து வேதாகமம் **1 இராஜாக்கள் 18:1**இல் வாசித்தறியலாம். அவரையே நோக்கும் தேவ பிள்ளைகளின் விசுவாசம் செயலிழந்து போக அனுமதிக்கமாட்டார். எலியாவின் வாயின் வார்த்தைகளை நிறைவேற்றினதை மாற்றி மறுபடியும் **எலியாவைக் கொண்டே சமாரியாவிற்கு மழையை கட்டளையிடப் போவதாக ஆகாப் ராஜாவிற்கு அறிவிக்கச் செய்தது இன்னும் விஷேசமான காரியமாகும்.** நீங்கள் உங்கள் நாவில் விசுவாசத்துடன் அறிக்கைப் பண்ணி இயேசுவின் வல்லமையான நாமத்தினால் ஆசீர்வாதங்களைப் பெற்று ஜெயம் பெறுங்கள். **ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

எமது பிதாவே! உம்மை விசுவாசிக்கும் உம் பிள்ளைகளை ஒரு போதும் வெட்கப்பட்டுப் போவதில்லை உம்மை குறித்த சகல விசுவாசமான உறுதி மொழிகளையும் பற்றிப் பிடித்து விசுவாசத்தில் பெலனடையத்தக்கதாக என்னை வழி நடத்தும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.–ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

"அவனவன் தன் தன் வாயின் பலனால் திருப்தியடைவான்;" (நீதிமொழிகள் 12:14)

ஜீவ மன்னா

பெப்ரவரி 18 புதன்

# உங்கள் வாழ்வினை மாற்றியமைக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

யாத்திராகமம் அதி: 36 – 37

**"தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்துகொண்டு, ஆட்டுத்தொழுவங்களிலிருந்து; அவனை எடுத்தார்."** (சங்கீதம் 78:70)

தேவனுக்குள் பிரியமான என் அன்பு தேவ பிள்ளைகளே! எம்மை அழைத்தவர் உண்மையுள்ளவரும், கிருபையுள்ளவரும் எம்மை நடத்துகிறவருமான ஜீவனுள்ள **தேவன் இயேசுகிறிஸ்துவின் உன்னத நாமத்தால் இப்புதிய உதய வேளையில் உங்கள் யாவரையும் ஆசீர்வதிக்கிறேன்.** எம்மை படைத்த தெய்வம் இவ்வுலகில் எம்மைத் தெரிந்துக் கொண்டு தமதண்டைக்கு எம்மை அழைத்து உலகத்தோர் மத்தியில் எம்மை பேறுபெற்றவர்களாக மாற்றினார். எங்கள் வாழ்வில் காணப்பட்ட பாவங்கள், சாபங்களைப் போக்கி நோய்கள், பிரச்சினைகள், துயரங்களை நீக்கி சாத்தானுடைய கட்டுகளை அகற்றி எம்மை மீட்டுக்கொண்டு **எம் வாழ்வினில் சந்தோஷம், சமாதானம், ஆறுதல் என்பவைகளை காணச்செய்தார்.**

தேவ பிள்ளைகளே! இன்றைய செய்தியின் முதல் தேவ வசனம் **சங்கீதம் 78:70**இல் உரைக்கிறது "*தம்முடைய தாசனாகிய தாவீதை தெரிந்துக் கொண்டு ஆட்டுத் தொழுவங்களிலிருந்து அவனை எடுத்தார்.*" என்று தாவீது ராஜாவிற்கு மாத்திரமல்ல அவருடைய ஜனங்களாகிய எங்களுக்கும் மகாப்பெரிய காரியங்களை செய்கிறார். தமது தகப்பனுடைய கால் நடைகளை காத்து போஷித்து வந்த **சிறுவனாகிய தாவீதை தமது சொந்த ஜனங்களை இஸ்ரவேலரை போஷிக்கவும், அவர்களை பாதுகாக்கும் தலைவனாகவும் நியமிக்கும்படி தெரிந்துக் கொண்டார்.** மந்தைகளின் மேய்ப்பனாக இருந்தவனை இஸ்ரவேலின் ராஜாவாக மாற்ற சித்தம் கொண்டார். **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** தாவீதின் தேவனாகிய இஸ்ரவேலின் தேவன் உங்களை தெரிந்துக் கொண்டாரா? அல்லது நீங்கள் அவரை உங்கள் ஆண்டவராக தெரிந்துக் கொண்டீர்களா? என்று ஒருவிசை நினைத்துப் பாருங்கள்.

தேவ பிள்ளைகளே! தாவீதின் தேவன் இயேசுகிறிஸ்துவுக்கூடாக **உங்களை அழைத்து அவருடைய சொந்த பிள்ளையாக மாற்றி உங்கள் வாழ்வின் நிலைமைகளை மாற்றினார்.** என்பதை புரிந்துக் கொண்டிருப்பீர்கள்.அவருடைய வல்லமையான நாமம் தம் பிள்ளைகள் மூலமாய் மனிதர்கள் மத்தியில் மகிமையடையும்படியாக தமது பிள்ளைகளின் வாழ்க்கையில் காணப்படும் **சகல தடைகளை உடைத்தெறிந்து சாத்தானின் அடிமைத்தனங்களிலிருந்து விடுதலையாக்கி உங்கள் வாழ்வினை ஆசீர்வதித்து உயர்த்தி நிலை நிற்கச் செய்வேன் என்று அவர் வாக்களித்துள்ளார்.** உங்கள் வாழ்வின் இருக்கும் நிலமைகள் இன்னும் மாறவில்லையே என பயப்படாதீர்கள், கலங்காதீர்கள்! தேவனுடைய வார்த்தைகளுக்கு செவி கொடுத்து கீழ்படியுங்கள். இன்றைய தினம் தேவன் உங்கள் வாழ்வினை மாற்றியமைத்து ஆசீர்வதிக்க வல்லமையுள்ளவராக இருக்கிறார். **இன்றைய நாள் ஆசீர்வாதமிக்க மனமகிழ்ச்சியின் நாள்!**

**ஜெபம்**

என் தேவனே! என் அன்பின் தேவனே! தாவீதின் தேவனாயிருந்து அவனை ஆசீர்வதித்து வாழ்வினை மாற்றி உயர்த்தினவரே! என்னையும் அவ்வண்ணமாக வாழ்வினை செழுமையாக மாற்றி ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"...உங்கள் கண்காண நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது, பூமியிலுள்ள சகல ஜனங்களுக்குள்ளும் நான் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (செப்பானியா 3:20)

ஜீவ மன்னா
பெப்ரவரி **19**
வியாழன்

**விண்ணக மன்னாவை ருசித்துப் பாருங்கள் !**

இன்றைய வேதவாசிப்பு
லேவியராகமம் அதி: 38 - 39

**"வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார்."** (பரி.யோவான் 6:33)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ***இப்புதிய நாள் உங்களனைவருக்கும் நல்ல நாளாக அமையும்படி வாழ்த்துகின்றேன்.*** உலகத்தில் வாழும் சகல மனிதர்களுக்கும் சகல ஜாதிகளுக்கும் உயிர் வாழ உணவு அவசியமாகும். ஆகாரம் அற்றுப் போனால் மனிதர்கள், உயிரனங்கள் யாவுமே பசியால் மடிந்து போவார்கள். படைப்பின் ஆரம்பமே பூமியின் தாவரங்களின் வளர்ச்சியாகும். பூமியானது புல்லையும், விதையையும் பிறப்பிக்கும் பூண்டுகளையும் பூமியின் மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதயின்படியே கொடுக்கும் கனி விருட்சங்களையும் முளைப்பிக்கடவது என்றார். அதன்படி மனிதர்களுக்குரிய ஆகாரவகைகளும், பறவைகளும், மிருகங்களும், ஊர்வன போன்ற சகல ஜீவராசிகளுக்குத் ***தேவையான சகல உணவும் பச்சைப்பசேல் என்ற புல்வெளிகள், தானிய வகைகள் யாவும் தேவனால் படைக்கப்பட்டு அருளப்பட்டதாகும் என்று வேதவசனம் உரைக்கிறது.***

தேவ பிள்ளைகளே! இன்றைய தினமும் மேலே தரப்பட்ட வேத வாக்கியம் ***பரி.யோவான் 6:33***இல் கூறப்பட்டுள்ள "***ஆகாரமானது பரலோக பிதாவால் எமக்கு அருளப்படுகிற ஆகாரத்தை குறித்ததாகும்.*** வேதாகமம் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு வாக்குத் தந்த தேசமாகிய கானானை நோக்கி பயணித்த போது ***நாற்பது வருடங்கள் அவர்களுடைய பசியை போக்கும்படியாக விண்ணிலிருந்து "மன்னா" என்னும் போசனை மிக்க ஆகாரம்*** இன்றைய தேவ செய்தியில் ஆரம்ப வசனம் குறிப்பிடுவது அன்று இஸ்ரவேலர்களை போஷிக்க வானிலிருந்து பொழிந்த மன்னாவை குறித்தன்று, ஆண்டவருடைய வாயிலிருந்து வெளிப்பட்ட ***சத்திய வார்த்தைகளை குறித்ததாகும்*** வானத்திலிருந்திறங்கி உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார். அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி ஆண்டவரே இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தர வேண்டும் என்றார்கள் இயேசு அவர்களை நோக்கி "***ஜீவ அப்பம் நானே என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்" என்று கூறினார்.***

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவின் உரைத்த சகல வார்த்தைகளும் உண்டு பண்ணி கூறவில்லை என்பதையும் அவரே வெளிப்படுத்தியுள்ளார். மனிதனுடைய நித்திய ஜீவனுக்குரிய ஆத்துமாவின் உணவாகிய ***சத்திய வார்த்தைகள் வாழ்வு தரும் வார்த்தைகள் இயேசுவிடமே உள்ளது.*** ஆகையால் அவரை நாங்கள் வாஞ்சிக்கும் போது எங்கள் ஆத்துமாவை போஷிக்கும்படியாகவும், பெலப்படுத்தும்படியாகவும் எங்கள் ஆத்துமாவிற்கு ஜீவனை பெற்றுக் கொடுக்கவும் பரலோகப் பிதாவின் ஜீவ வார்த்தைகளை எமக்கு சொல்லித் தருகிறார். நீங்கள் உலகத்தின் ஆகாரங்களினால் சரீரத்தை போஷிப்பது போல உங்கள் ***ஆத்துமா ஜீவன் பெறும்படியாக இயேசுகிறிஸ்து கற்றுத் தரும் சகல வார்த்தைகளையும் செவிமடுத்து அதன்படி எந்நேரமும் கீழ்படிந்து நடவுங்கள். வெற்றிச் சிறந்த நாள்!***

**ஜெபம்**

என் தேவனே! உங்கள் மகன் மூலமாய் ஜீவனுக்குரிய ஆகாரங்களை தருவதால் நன்றி! அதன் மூலம் எமது ஆத்துமா சக்தி படுத்தவும் போஷிக்கவும் எனக்கு உதவி செய்யுங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." (பரி.யோவான் 1:14)

ஜீவ மன்னா

பெப்ரவரி 20

வெள்ளி

**திக்கற்றவர்களுக்கு சகாயம் புரிந்து அதன் பிரதிபலனை தேவனிடம் பெற்றுக் கொள்ளுங்கள் !**

இன்றைய வேதவாசிப்பு

யாத்திரா: 40
லேவியரா: 01

**"...அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்ளு நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்."**

(பரி.லூக்கா 14:4)

மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாகிய **இயேசுகிறிஸ்து என்னும் ஜீவனுள்ள தேவனுடைய பரிசுத்த நாமத்தால் உங்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.** இப்புதிய நாள் தேவன் எமக்கருளிய நல்ல நாளாகும். இம்மண்ணிலே வாழும் சுமார் **700 கோடி ஜனங்கள் மத்தியில்** பரலோகப் பிதாவாகிய ஆண்டவரை அறிந்து அவரை சேவிக்கும் நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்களாவோம். **சங்கீதம் 34:8**இல் இப்படி கூறப்படுகிறது **"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள் அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்."**

தேவ பிள்ளைகளே! **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** உங்கள் வாழ்விலே நீங்கள் சந்திக்கும் பிரச்சினைகள், கஷ்டங்கள், நோய்கள், துன்பங்கள், சவால்கள் இவைகளை எண்ணி வேதனைப்படாதிருங்கள் நீங்கள் ஆசீர்வாதம் பெற அழைக்கப்பட்டவர்கள் ஆகையால் **தேவனை விசுவாசித்து இடைவிடாது ஜெபம் செய்யுங்கள். உங்களுக்குச் சொந்தமான ஆசீர்வாதங்களை உங்கள் எதிராளியாகிய சாத்தான் திருட இடமளிக்காதீர்கள்.** இன்றைய தேவ வார்த்தை பரி.லூக்கா14:14இல் விஷேசித்த செய்தியாக உரைப்பது ஏழைகளையும், ஊனரையும், சப்பாணிகளையும், குருடர்களையும் அழைப்பாயாக. நாம் இப்படியாக அப்பாவிகளும் பரிதாபத்துக்குரியவர்களாய் இருக்கும் **எளியவர்களுக்கு உதவ வேண்டும். அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்.** அவர்கள் உனக்கு பதில் செய்யமாட்டார்கள் நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்.

தேவ பிள்ளைகளே! தனக்கு செய்யப்பட்ட உதவிகளுக்கு பிரதி உபகாரம் செய்ய முடியாதபடி இந்த உலகில் பரிதாபத்துக்குரியவர்களாய் இருக்கும் ஏழைகள், ஊனமுற்றோர்கள் முடவர்கள், குருடர்கள் போன்ற அங்கவீனர்களுக்கு நாம் உதவி உபகாரங்கள் செய்தால் **இயேசுகிறிஸ்து இவ்வுலகிற்கு வருகை தரும் நாளிலே இக்காரியங்களுக்கு பிரதிபலன் கிடைக்கும் என இவ் வாக்கியங்கள் தெளிவுப்படுத்துகிறது.** ஏனெனில் இவர்களுக்கு எமக்கும் பிரதி உபகாரம் செய்ய முடியாது. ஆகையால் எங்கள் செய்கைகளுக்கு பிரதிபலன் அளிப்பவர் எம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே ஆகையால் பணக்கார உறவினர்கள், நண்பர்கள், சகோதர, சகோதரிகள் அயலவர்களுக்கு உதவி உபகாரம் செய்வது மாத்திரமல்ல **திக்கற்றவர்களாய் இயலாமையில் வாடும் வழியற்ற ஏழைகளுக்கு உதவிகள், ஒத்தாசைகள் செய்து தேவனுடைய ஆசீர்வாதத்தை உரிமையாக்கிக் கொள்ளுங்கள். ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

கிருபை நிறைந்த தேவனே! திக்கற்றவர்களுக்கு உதவி உபகாரம் செய்பவர்களை ஆசீர்வதிப்பவரே! பிரதி உபகாரம் செய்ய முடியாத நிலமையில் பரிதபிக்கும் ஜனங்களுக்கு உதவி ஒத்தாசை செய்யக் கூடியதாக என்னை மாற்றுங்கள். எங்கள் காரியங்களுக்கு பிரதிபலன் கொடுக்கும் உங்கள் ஆசீர்வாதம் எம்மீது கடந்து வருமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப்பிச்சைகொடுங்கள், பழமையாய்ப்போகாத பணப்பைகளையும் குறையாத பொக்கிஷத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்துவையுங்கள், அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை."

(பரி.லூக்கா 12:33)

ஜீவ மன்னா

பெப்ரவரி **21**
சனி

## ஆராய்ந்து முடியாத எண்ணிப் பார்க்காத அதிசயங்களை செய்கின்ற தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம்
அதி: 02 - 03

**"ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்."** (யோபு 9:10)

தேவனுக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் மகத்துவமான நாமத்தினால் ***இன்றைய தினம் வெற்றிகரமான நாளாய் அமையும்படி வாழ்த்துகின்றேன்.*** எம்மை உருவாக்கின படைப்பின் கர்த்தர் எம் நினைவுகளை தூரத்திலிருந்தே அறிகிறார். ஆனால் உலக மாந்தர்களோடு நாம் எவ்வளவு நெருங்கி பழகிய போதும் ***அவர்கள் உள்ளத்தை எம்மால் புரிந்துக் கொள்ளவே முடியாது.*** அவர்கள் இருதயத்தில் என்ன இருக்கிறது? என அறியமுடியாது. ஆகையால் ஆண்டவர் **எரேமியா 17:2**இல் ***எல்லாவற்றையும் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது அதை அறியத்தக்கவன் யார்? என்பதாக உரைக்கின்றார்.***

அன்பார்ந்தவர்களே! மனிதனது இருதயத்தில் நினைவுகளே அவனது ஆத்துமாவை தவிர வேறு எவரும் அறியார்கள். அதே போல் தேவனுடைய காரணங்களை அவரின் ஆவியானவரையன்றி வேறு எவரும் அறிய முடியாததாகும். என்று வேதவாக்கியம் கூறுகிறது. **I கொரிந்தியர் 2:11** ***மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல தேவனுடைய ஆவியேயன்றி ஒருவன் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்*** என்பதாகும். இதன்படி ஒரு மனித இருதயத்தை ஆராய்ந்தறிவது முடியாத காரியமாகும். எமது பரலோக தேவனுடைய காரணங்கள் ***இருதயத்தின் நினைவுகளை தேவனுடைய ஆவியானவரைத் தவிர வேற எவராலும் தெரிந்துக் கொள்ள முடியாது என கூறப்பட்டுள்ளது.*** சாதாரண மனிதர்களுடைய இருதயத்தையே மற்றவர்களால் அறிந்துக் கொள்ள முடியாத போது ராஜாதி ராஜாவாகிய பரத்திலிருந்து கிரியை புரியும் மகத்துவமான பரம பிதாவின் காரணங்கள் நாம் அறிவது ***எங்ஙனம்? என்பதை சிந்தியுங்கள்.***

தேவ பிள்ளைகளே! ஆயினும் உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக! இன்றைய தினத்தில் எமது மன்னா இதழின் முதல் வசனம் **யோபு 9:10**இல் ***"ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்."*** நீங்கள் அவரது பிள்ளையாக இருப்பதால் அவர் உங்கள் மீது அளவில்லா அன்பு கொண்டிருப்பதால் எப்போதும் ***உங்கள் வாழ்வினிலே நன்மையான காரியங்களை செயல்படுத்துகிறார்.*** ஆகையால் அவரது காரண காரியங்களை அறியாதிருந்த போதும் தேவ வார்த்தைகளின் பிரகாரம் உங்களை குறித்து அவர் சமாதானத்தின் யோசனைகள் வைத்திருப்பதாக கூறியுள்ளார். ***நீங்கள் தேவனுக்குள்ளாய் வாழ்ந்து ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் பெற்று அனுபவித்து மகிழ்ந்திருங்கள் வெற்றிச் சிறந்த நாள்!***

**ஜெபம்**

என் தேவனே! கர்த்தாதி கர்த்தரே நீங்கள் ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அற்புத அதிசயங்களையும் செய்கிறவராய் இருக்கிறீர்கள். உங்கள் விருப்பப்படி உங்கள் யோசனையின்படி என்னை ஆசீர்வதியுங்கள் இயேசுவின் நாமத்தில்.~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"ஆவியின் வழி இன்னதென்றும், கர்ப்பவதியின் வயிற்றில் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிருக்கிறதுபோலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய்."
(பிரசங்கி 11:5)

ஜீவ மன்னா
பெப்ரவரி 22
ஞாயிறு

## உங்களுடைய சந்ததியை பெருகப் பண்ணும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
லேவியராகமம் அதி: 04 – 05

**"உம்முடைய சந்தானம் பெருகி, உம்முடைய சந்ததியார் பூமியின் பூண்டுகளைப்போல இருப்பார்கள் என்பதை அறிந்துகொள்வீர்."**
(யோபு 5:25)

தேவனுக்குள் பிரியமான! என் அன்பு தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் மகிமை பொருந்திய நாமத்தினால் இன்றைய நாளில் உங்களது வாழ்வின் தடைகள் யாவும் நீங்கி எல்லாக் காரியங்களும் வளம் பெறுமாறு வாழ்த்தி ஜெபிக்கிறேன்.** இப்புவியில் படைக்கப்பட்ட முதல் மனிதர்களாகிய ஆதாம் பூமியின் மண்ணினாலே உருவாக்கி **ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார் மனிதன் ஜீவாத்துமானார்** என்று வேதம் வெளிப்படுத்துகிறது. மண்ணினால் உருவாக்கிய மனிதனுக்கு அவர் பாராட்டும் அன்பு அளவில்லாததாய் இருக்கிறது என்பது நாம் அறிந்ததாகும். அவர் எமது நோய்களை குணமாக்கி பிரச்சினைகள் போக்கி வாழ்க்கையில் சந்தோஷம், சமாதானம் செழிப்பு மகிழ்ச்சி, ஆறுதல் தந்து எம்மை ஆசீர்வாதமாக வாழ்விக்கிறார்.

தேவ பிள்ளைகளே! மேலே காணப்படும் வேதவசனத்தில் கூறப்பட்டுள்ளது **"உம்முடைய சந்தானம் பெருகி உம்முடைய சந்ததியார் பூமியின் பூண்டுகளைப் போல இருப்பார்கள்"** என்பதை அறிந்துக் கொள்வீர்கள் என்று மனிதனானவன் புவியில் வாழும் நாட்கள் மிக சொற்பமாகும். ஆகையால் மண்ணில் முளைத்து சில காலங்களில் அழிந்து போகும் புல்லிற்கு மனிதனுடைய வாழ்க்கை ஒப்பிடப்பட்டுள்ளது. தேவன் எமது சுபாவத்தை அறிந்து வைத்திருக்கிறார். **"நாம் மண்ணினால் உருவாக்கப்பட்டவர்கள் என்பதை கர்த்தர் நினைவு கூறுவார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார் நாம் மண்ணென்று நினைவு கூறுகிறார்." "மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது. வெளியின் புஷ்பத்தைப் போல் பூக்கிறான். காற்று அதன் மேல் வீசியவுடனே அது இல்லாமற் போயிற்று அது இருந்த இடமும் இனி அதை அறியாது."** என்று வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. **(சங்கீதம் 103:15)**ஆயினும் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** உங்கள் ஆயுளை **70வது வருஷமாக்கி** அதிலும் உங்கள் சரீரம் வலுவுள்ளதாயிருப்பின் **80 வருடங்கள்** வரை உங்கள் ஆயுளை நீடிக்கச் செய்து உங்களை ஆசீர்வதித்து உங்களோடிருப்பார் சிருஷ்டியின் கர்த்தர்.

தேவ பிள்ளைகளே! **நீங்கள் தேவ பயம் உள்ளவர்களாக வாழ்வீரகளேயானால் ஆண்டவர் உங்கள் கரங்களை ஆசீர்வதிப்பார்.** அவர் உங்கள் பிள்ளைகளையும் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பார். உங்கள் இல்லங்களை ஆசீர்வதிப்பார். கர்த்தர் படைத்த **படைப்புகளிலே மிக உயர்வான படைப்பு மனிதனேயாவான் எங்களை அவர் சாயலாக உருவாக்கினார்.** நாங்கள் மண்ணினால் உருவாக்கப்பட்டிருப்பதால் நாம் மரணமடைந்த பின் எம் சரீரம் மண்ணுக்கே செல்கிறது. இதனாலே பூமியில் சில நாட்கள் இருந்து வாடிப் போகும் புல்லிற்கு எமது வாழ்வு ஒப்பிடப்பட்டுள்ளது. எமது **சந்ததியை பூமியில் பெருகப்பண்ணி எம்மை ஆசீர்வதிக்கும் பரமபிதா இன்றும் எம்மோடிருக்கிறார். ஜெயம் தரும் நாள்!**

**ஜெபம்**

எண்ணைப் படைத்த படைப்பின் தேவனே! உங்கள் கரங்களினால் மண்ணைக் கொண்டு எங்களை சிருஷ்டித்த போதும் நீங்கள் எமக்கு காட்டும் அன்பு அளவில்லாததாக இருப்பதால் உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். பூமியின் புல் பூண்டைப் போல் நாம் இருந்தாலும் எம்மையும் ஆசீர்வதித்து உயர்த்துகிறபடியால் நன்றி! ~ஆமென்~

**வேத வாக்குத்தத்தம்**

"நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்."
(சங்கீதம் 8:5)

ஜீவ மன்னா

பெப்ரவரி 23 திங்கள்

# இருதயத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் அதி: 06 – 07

**"நீர் உமது கையைத் திறந்து, சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர்."** (சங்கீதம் 145:16)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! பிதாவாகிய தேவனாலும் ஜீவனுக்கு அதிபதியாக பிதாவின் குமாரன் **இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும், இரக்கமும், சமாதானமும் இன்றைய தினத்திலும் உங்கள் இல்லங்களில் பொழிந்தருளும்படியாக பிரார்த்திக்கின்றேன்.** ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்திலும் பலவிதமான வாஞ்சைகள் உண்டு. எனக்கு எந்த விதமான விருப்பமும் இல்லை என எவருமே கூற முடியாது. மனிதர்களுடைய வாழ்க்கையில் அவர்களுடைய ஆசைகள், மனவிருப்பங்கள் நிறைவேறாது போகும் போது எதிர்ப்பார்ப்புக்களற்று **வாழ்க்கையை வெறுத்து ஏனோதானோவென்று வாழ்கிறவர்களாக இருக்கிறார்கள்.** தங்கள் எண்ணங்கள் நிறைவேறாது தோல்வியடைந்து, **மனம் வெறுப்புற்ற நிலையில் எனக்கு வாழவே பிடிக்கவில்லை, உயிர் வாழ வேண்டும் என்பதற்காகவே வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று அங்கலாய்ப்போடு இருப்பவர்களும் உண்டு. ஆயினும் தேவ பிள்ளைகளே! உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

பிரியமானவர்களே! இவ்வுலகில் வாழும் சகல மாந்தர்கள் மத்தியில் எம் சிருஷ்டிகர் பரத்திலிருந்து செயல்புரியும் இஸ்ரவேலின் தேவனைப்பற்றி அறிந்து அவரை விசுவாசித்து பின்பற்றும் அவருடைய **பிரியத்திற்குரிய சுவிகாரப் புத்திரர்களாய் இருப்பவர்கள் பாக்கியவான்களே!** இன்றைய ஜீவ மன்னா தேவ செய்தியின் தலைப்பு வேதவாக்கியம் **சங்கீதம் 145:16**இல் எழுதப்பட்டிருக்கிறது. **"நீர் உமது கையைத் திறந்து சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறார் என்று. மாம்சமான யாவருடைய தெய்வம் எமது ஆண்டவராயிருக்கிறபடியால் தம் படைத்தவைகளைக் குறித்து மிக அக்கறை உள்ளவராய் இருக்கிறார்."** அவர் மனிதர்களை மாத்திரமல்ல மிருகங்கள், பட்சிகள், பிராணிகள், பூச்சிகள் ஊர்வன நீரில் வாழும் மீன்கள் போன்ற சகல ஜீவராசிகள் மீதும் அவர் அக்கறை செலுத்துகிறார். அவைகளையும் கவனிக்கிறார். என்பதை வேத வாக்கியங்கள் தெளிவுபடுத்துகிறது. **சங்கீதம் 147:9**இல் அவர் மிருக ஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கை குஞ்சுகளுக்கும் ஆகாரம் கொடுக்கிறார் என்று கூறப்படுகிறது.

தேவ பிள்ளைகளே! மிருக ஜீவன்களிலும் பறவை இனங்களிலும் மிகவும் அவலட்சனமான காகத்திற்குகூட ஆண்டவருடைய கவனிப்பு இருக்குமானால் அவருடைய சாயலாகவும் அவரது ரூபத்தின்படியும், அவருக்கு சமமாக படைத்த மனுஷனைக் குறித்து எவ்வளவு **அக்கறை கொண்டிருப்பார் என சிந்தியுங்கள்.** அது மாத்திரமல்ல இப்பூமியின் மனிதர்கள் மத்தியிலே தம்முடையவர்கள் எனவும் தம்முடைய சம்பத்து, பொக்கிஷம் எனவும் தெரிந்துக் கொண்ட தேவ ஜனங்களாகிய எம்மைக் குறித்து அதிக அக்கறை செலுத்துபவராய் இருப்பாரல்லவா? ஆகையால் **உங்கள் உள்ளத்தின் வாஞ்சைகளை இருதயத்தின் விருப்பங்கள் யாவற்றையும் அவர் பாதத்தில் வைத்து ஜெபம் செய்யுங்கள்.** உங்கள் ஆசைகள் உங்கள் வாழ்க்கைக்கு நன்மைகளை உண்டு பண்ணுமாகில் உங்கள் விருப்பங்கள் தேவனானவரால் நிறைவேறும். ஏனெனில் நீங்கள் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை வாழ்வதைக் காணவே அவர் விருப்பமுடையவராய் இருக்கிறார். **மகிழ்ச்சிகரமான மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

என்னை நேசிக்கும் என் இரட்சகராகிய தேவனே! என்னையும் உங்கள் பிள்ளையாக மாற்றினவரே! என்னை மிக அக்கறையுடன் விசாரிக்கிறவரேஎன் இருதயத்தின் வாஞ்சைகளை அறிகிறவரே! என் வாழ்கைக்கு நன்மையளிக்கக் கூடிய விருப்பங்களை நிறைவேற்றி என்னை ஆசீர்வதியுங்கள் என இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து,..." (சங்கீதம் 145:19)

ஜீவ மன்னா

பெப்ரவரி 24

செவ்வாய்

# ஏழைகளின் விண்ணப்பங்களுக்கு பதில் கொடுக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம்

அதி: 08 - 09

**"ஏழையைப் பரியாசம்பண்ணுகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்திக்கிறான்; ஆபத்தைக்குறித்துக் களிக்கிறவன் தண்டனைக்குத் தப்பான்."** (நீதிமொழிகள் 17:5)

பிரியமான தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்து நம்மில் அன்பு கூர்ந்து **எமக்காய் ஜீவனைக் கொடுத்த அந்த மகாதயவினால் கிடைக்கப் பெற்ற மீட்பிலே மகிழ்ந்திருக்கும் எமக்கு இன்றைய தினம் நல்லநாளாக அமைந்திருக்கபடியால் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.** விண்ணையும், மண்ணையும் படைத்து ஆளுகை செய்யும் சர்வ வல்லமை பொருந்திய சிருஷ்டிகரின் சொந்த பிள்ளையாக வேறுபிரிக்கப்பட்டவர்கள் **ஆசீர்வாதம் பெற்ற பாக்கியவான்களாயிருக்கிறார்கள்!**

தேவ பிள்ளைகளே! தேவனானவர் எவ்வளவு உயர்ந்தவரும் பரிசுத்தமான மகத்துவமான தேவனாய் விளங்குகிறார். மானிடரான எம்மால் அவரை அப்பா பிதாவே என அழைக்கவே அண்மித்து ஜெபிக்க முடியாத போதும் எம்மை தம்மிடமாய் அழைத்து **மகனே, மகளே நீ என் உடமை என்று கூறி எம்மை நெருக்கமாக்கிக் கொண்டார்.** நீங்கள் அவருடைய படைப்பின் பிள்ளைகள் உங்கள் வாழ்க்கையின் தரம் மாறுபட்டதாயிருக்கலாம். சிலர் சுகபோக வாழ்க்கை வாழ்ந்தால் சிலர் மிக ஏழைகளாய் பரிதபிக்கிறவர்கள் வசதி குறைந்தவர்களாய் வாழலாம். எப்படியாக வாழ்ந்தாலும் யாவரையும் படைத்தவர் எமது பரலோக தேவனேயாவார். எமது வேதாகமம் **நீதிமொழிகள் 22:2**இல் எழுதப்பட்டுள்ளது. **"ஐசுவரியவானும், தரித்திரனும் ஒருவரையொருவர் சந்திக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் உண்டாக்கினவர் கர்த்தர்."**

தேவ பிள்ளைகளே! உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! என் ஆண்டவரே என்னை ஏழையாய் வறியவனாய் படைத்தீர்கள் என்று எண்ணி **உங்கள் ஏழ்மையைக் குறித்து துக்கமடையாதீர்கள், கவலையடையாதீர்கள்** இன்றைய தின **"ஜீவ மன்னா"** நாளேட்டின் முதல் வசனம் கூறுகிறது ஏழையை பரியாசம் பண்ணுகிறவன் அவரை உண்டாக்கினவரை நிந்திக்கிறான்......என்று. ஆகையால் வேதனைக் கொள்ளாமல், கவலையடையாமல் உங்களை படைத்தவருடைய கரங்களில் உங்களை ஒப்புக் கொடுத்து அவருடைய வார்த்தைகளை செவிமடுத்து கட்டளைகளுக்கு கீழ்படிந்து பரிசுத்த வாழக்கையை வாழுங்கள். **நாள்தோறும் இடைவிடாமல் ஜெபித்து உங்கள் விண்ணப்பங்களை அவரிடம் ஏறெடுங்கள்.** நீங்கள் அவருடைய அன்புக்குரிய மகனாகவோ, மகளாகவோ இருப்பதால் **நீங்கள் இல்லாமையினால், வறுமையில் ஏழ்மையில் துக்கமடைவதை அவர் காண விரும்பாமல் உங்கள் வறுமையை நீக்கிப் போடுவார்.** உங்களை ஆசீர்வதிப்பார். **"சிறியவனை புழுதியிலிருந்து தூக்கி விடுகிறார், எளியவனை குப்பையிலிருந்து உயர்த்துகிறார்." தேவன் இன்றும் உங்களோடிருக்கிறார். ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

எனதருமை இயேசுவே! நீங்கள் எம் படைப்பின் தேவனாயிருக்கிறீர்கள். ஆகையால் உங்களுக்கு நன்றி! நான் ஏழ்மையில் இருந்த போதும் என்னை ஆசீர்வதித்து உயர்ந்த நீங்கள் வல்லவராய் இருக்கிறீர்கள். என் வாழ்வை உங்களிடம் ஒப்படைக்கிறேன். நீங்களே என்னை ஆசீர்வதியுங்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்."
(நீதிமொழிகள் 10:22)

ஜீவ மன்னா

பெப்ரவரி 25 புதன்

இலவசமாகப் பெற்றுக் கொண்ட இரட்சிப்பின் நிமித்தம் நீங்கள் இயேசுவுக்கு செய்ததென்ன?

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் அதி: 10 – 11

**"கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத்திறந்து, அவர்களை வெளியே கொண்டுவந்து: நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான்."**
(அப்போஸ்தலர் 5:19,20)

தேவனுக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! நன்மைகளினாலும், கிருபையினாலும் எம்மை வழி நடத்தும் ஜீவனுள்ள தேவனுடைய வல்லமை நிறைந்த நாமத்தினால் ***இப்புதிய நாளிலே புதிய ஆசீர்வாதங்கள் உங்களிடத்தில் கடந்து வருமாறு பிரார்த்திக்கின்றேன்.*** இன்றைய தினத்தில் ***ஜீவ மன்னா தினமஞ்சரிக்கூடாக*** தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகளை வாசித்தறியும் ***நீங்கள் ஒவ்வொருவரும் உண்மையாகவே ஆசீர்வாதம் பெற்ற பாக்கியவான்கள் ஆவீர்கள்.*** ஏனெனில் சுமார் ***2 கோடியே 3 இலட்சம்*** ஜனங்கள் வசிக்கும் எம் தாயகத்தில் எம்மை அழைத்து, தமது சுவிகாரப் புத்திரர்களாக மாற்றியது தமது சொந்த விருப்பத்தின்படியாகும். ***இதை பெற்றுக் கொண்ட நாம் பாக்கியவான்களல்லவா!***

தேவ பிள்ளைகளே! சிருஷ்டிகரும் எம்மை உண்டாக்கினவருமான ஆண்டவரை குறித்து நாங்கள் அறியாத பொழுதே எம்மை அழைத்து ***உலகில் பாவத்தோடும், சாபத்தோடும் வாழ்ந்த எங்களை இரட்சிக்கும்படியாய் சித்தம் கொண்டார்.*** இன்னுமாய் அவர் தாமே பரலோகத்திலே பிதாவாக கிரியை செய்த போதிலும் தாம் ஒரே பேறான சொந்த மகனை அனுப்பி ***ஒரே குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பி அவரது பெரிதான கிருபையால் எம் ஜீவனை மீட்டார்.*** அது மாத்திரமல்ல பரலோக பிதாவைக் குறித்து நாம் அறிந்துக் கொள்ளும்படி சகலவற்றையும் வெளிப்படுத்தினார். இச்செய்தியின் பிரதான வசனம் ஆண்டவராகிய தேவன் தமது ஊழிக்காரராகிய தூதர்களை அனுப்பி ***அவரது சீஷராகிய பேதுருவையும், யோவானையும் சிறையிலிருந்து விடுதலை செய்தார்*** என்று எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! அவர்கள் சிறையிலிருந்து வெளியே வரும்படி எந்த முயற்சியும் எடுக்கவில்லை ஆயினும் தேவதூதன் சிறைக்கதவுகளை திறந்து அவர்களை வெளியே கொண்டு வந்து நீங்கள் போய் தேவாலயத்திலே நின்று இந்த ஜீவ வார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களக்கு சொல்லுங்கள் என்றான். இவ்வண்ணமாகவே உலகிலே பாவத்திலும், சாபத்திலும் வாழ்ந்து வந்த எம் ஒவ்வொருவரையும் தமது சொந்த குமாரனைக் கொண்டு மீட்டுக் கொண்டார். அவரது ***இந்த மீட்பு கிடைக்கும் பொருட்டு நாம் எந்த முயற்சியும் செய்யவில்லை.*** ஆகையால் நாம் பெற்றுக் கொண்ட இந்த இரட்சிப்பை பாவத்திலிருந்து, சாபத்திலிருந்து எமக்கு இலவசமாக கிடைத்த இந்த விடுதலையை மற்றவர்களுக்கு அறிவித்து மற்றவர்களும் இந்த விடுதலைப் பெறும்படி நாம் வழிகாட்ட வேண்டியதாயிருக்கிறது. ***தேவன் அளித்த கடமையாயிருக்கிறது. நீங்கள் எனக்கு சாட்சியாயிருக்கிறீர்கள்*** எனக்கு சாட்சியாயிருக்கிறீர்கள். என்று இயேசுகிறிஸ்து கூறியபடி அவரது சாட்சிகளாய் அவரது சித்தத்தை உத்தரவாதத்தோடு நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம். ***வல்லமை நிறைந்த ஆசீர்வாதமான நாள்!***

ஜெபம்

என் தேவனே! தகுதியில்லா விடுதலைக்கு ஒரு முயற்சியும் செய்யாத என்னையும் மீட்டு உங்கள் பிள்ளையாக மாற்றியவரே நன்றி! நீங்கள் எனக்கு கொடுத்த கடமையாகிய பாவத்திலிருந்து விடுதலையை பெறும் வழியை மற்றவர்களுக்கு அறிவிக்க உங்கள் சித்தம் என்னில் நிறைவேற என்னை ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்." (2 கொரிந்தியர் 5:18)

ஜீவ மன்னா

பெப்ரவரி 26

வியாழன்

## என் ஆத்துமாவை மரண கண்ணிக்கு தப்புவிக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு

லேவியராகமம் அதி: 12 – 13

**“என் ஆத்துமாவை மரணத்துக்கும், என் கண்ணைக் கண்ணீருக்கும், என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர்.”** (சங்கீதம் 116:8)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற தேவனுடைய மகிமையின் நாமத்தால் இந்த இளங்காலைப் பொழுதினிலே **தேவனுடைய செய்தியை வாசிக்க ஆயத்தப்படும் உங்களனைவரையும் வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.** இன்றைய நாள் நல்ல நாளே! உங்கள் உயிருள்ள தேவனானவர் உங்களை அழைத்தது உங்களை நித்திய ஜீவனுக்குரிய வழிப்பயணத்தில் கடைசிவரை உங்களை வழிநடத்தும்படியாகவே இப்பயண முடிவில் **பரலோகத்தின் ஜீவ கிரீடத்தை உங்களுக்கு தரப் போகிறார்.** அதனால் உங்கள் வாழ் நாட்கள் முழுவதும் உங்களை பாதுகாக்கும் பொருட்டு செயல் புரிகிறார்.

தேவ பிள்ளைகளே! உலக மானிடர்கள் ஞானவான்களாய், பலவான்களாய் இருந்த போதும் இடறிவிழும் சந்தர்ப்பங்கள் அநேகம் உண்டு. ஆத்மீகர்களாகிய நாங்களும் கூட அநேக வேளையில், அநேக காரியங்களினால் இடறிப் போகிறோம். ஏனெனில் தேவ பிள்ளைகளாகிய எம் வாழ்க்கையில் எமது விரோதியான **சத்துருவானவன் வித்தியாசமான வழிகளில் உபாயங்களையும், சோதனைகளையும் உண்டு பண்ணி எம்மை தடுமாறும்படி செய்கிறான்.** உலக வாழ் ஜனங்களைப் போல் அல்லாது தேவ பிள்ளைகளாகிய எங்களை எமது பாதங்கள் இடறி நாம் விழுந்து போகாதபடி தேவன் எம்மை காத்துக் கொள்கிறார். எங்கள் கால்களை பெலப்படுத்துகிறார். தாவீராஜாவிற்கு விரோதமாக செயல்பட்ட சவுலையும் மற்ற எதிரிகளையும் அழித்து அவர்களுடைய கரங்களிலிருந்து தாவீது ராஜாவை மீட்டுக் கொண்டார். **சங்கீதம் 18:33**இல் “அவர் என் கால்களை மான்களுடைய கால்களைப் போலாக்கி என்னுடைய உயர்ஸ்தலங்களில் என்னை நிறுத்துகிறார்” என்பதாக வெளிப்படுத்துகிறார்.

தேவ பிள்ளைகளே! **சங்கீதம் 116:8**இல் **“எம் கர்த்தராகிய ஆண்டவர் எம் காலை இடறுதலுக்கு தப்புவிக்கிறவர்”** என்று எழுதப்பட்டிருக்கிறது ஆகையால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!** நாம் உற்சாகத்தோடு கடந்து செல்லும் ஆத்மீக வழிப்பயணத்தில் எமக்கு விரோதமாக ஏற்படும். **சரீர ஆத்மீக போராட்டங்கள், நோய்கள், வேதனைகள் வருமானத்தின் குறைபாடுகள் போன்ற பிரச்சினைகளினால் எம் பாதம் தள்ளாடதவாறு எம்மை பாதுகாக்கும்படியாக எம் தேவன் எங்களோடிருக்கிறார்.** நீங்கள் முழு உள்ளத்தோடு அவரை பின் தொடர்வீர்களாகில் உங்கள் ஆத்மீக ஜீவியத்தின் பயணத்தில் உங்கள் கால் இடறிவிழாதபடி அவருடைய தூதர்களைக் கொண்டு உங்களை பாதுகாப்பார். **உங்களுக்கு ஜெயம் தரும் நாள்!**

ஜெபம்

என் அன்பு தேவனே! இவ் வருடத்திலே என் ஆத்மீக பாதையில் ஆரம்பம் முதல் முடிவுவரை என் கால்களை இடறச் செய்யும் எந்த இடையூறும் நேராதபடி உங்கள் தேவ தூதர்களைக் கொண்டு என்னை பாதுகாத்தருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். –ஆமென்–

வேத வாக்குத்தத்தம்

“வழியை உயர்த்தி உயர்த்தி, அதைச் செம்மைப்படுத்தி, இடறல்களை என் ஜனத்தின் வழியிலிருந்து எடுத்துப்போடுங்கள் என்னப்படும்.” (ஏசாயா 57:14)

**ஜீவ மன்னா**
பெப்ரவரி 27
வெள்ளி

## சிறைக் கதவுகளை திறந்து விடுதலை செய்யும் தேவன் !

**இன்றைய வேதவாசிப்பு**
லேவியராகமம்
அதி: 14 - 15

**"கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத்திறந்து, அவர்களை வெளியே கொண்டுவந்து:"**
(அப்போஸ்தலர் 5:19)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவிக்கின்ற சர்வ வல்லமை பொருந்திய மகத்துவமுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே இன்றைய தினம் உங்கள் மீட்பின் நாளாயிருக்குமாறு பிரார்த்திக்கின்றேன்.** மாமிச பிரகாரமான மனிதனுடைய செயல்கள், திறமைகள், காரியசித்தி எல்லாவற்றிற்கும் ஒரு வரையறை உண்டு. **மனிதனால் செய்யக் கூடிய காரியங்களைப் பார்க்கிலும் செய்ய முடியாத காரியங்களே அதிகமாகக் காணப்படுகின்றன..** ஆனால் எம்மை சிருஷ்டித்த கர்த்தரால் சகலமும் செய்யக் கூடும். **எரேமியா 32:27இல் "இதோ நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர் என்னால் செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ"** என்று கூறப்படுகிறது.

தேவ பிள்ளைகளே! எங்கள் கர்த்தரானவர் எமது முற்பிதாவாகிய ஆபிரகாமோடு இடைப்படும் போது அவனை நோக்கி "நான் சர்வ வல்லமையுள்ள தேவன் நீ எனக்கு முன்பாக நடந்துக் கொண்டு உத்தமனாயிரு" என்றார். ஆபிரகாமின் தேவனும் இஸ்ரவேலின் தேவனுமாகிய **சர்வ பராக்கிரமத்தின் தேவனை விசுவாசித்து ஆத்துமாவிலே அவருக்கு சமீபமாக சேர்ந்து வாழும் நீங்கள் எவ்வளவு பெரிய அதிர்கஷ்டசாலி என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.** மேலே காணப்படும் பிரதான வசனம் **அப்போஸ்தலர் 5:19**இல் **எருசலேம் "பட்டணத்திலே இயேசுவின் சீஷர்கள் நோய்களை இயேசுவின் நாமத்தில் குணமாக்குவதை கண்ட பிரதான ஆசாரியரும், சதுசேயரும் பொறாமை கொண்டு அவர்களை சிறையில் அடைத்தார்கள். அப்போது கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையில் கதவுகளைத் திறந்து அவர்களை வெளியே கொண்டு வந்தார்."** என்பதை வெளிப்படுத்துகிறது. இன்றைய தினம் இந்த ஜீவ மன்னா சஞ்சிகையை வாசிக்கும் அன்பான தேவ பிள்ளைகளே! உங்கள் வாழ்க்கையில் காணப்படும் வெவ்வேறு விதமான பிரச்சினைகள், துன்பங்கள், துயரங்கள் போன்ற சகல வேதனையைக் கொண்டு வரும் எல்லா காரியங்களிலுமிருந்து மீளுவது எப்படி என்று அறியாது சிறைப்பட்டிருக்கிறீர்களா? ஆயினும் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!**

அன்பார்ந்தவர்களே! எந்தப் பிரச்சினையில் எந்த நிலைமையில் சிறைப்பட்டிருப்பின் **உங்களை விடுதலைப்படுத்தும்படியாக உங்கள் ஆண்டவர் உங்களருகே இருக்கிறார்.** ஜீவனுள்ளவராய் நிற்கிறார். **அப்போஸ்தலர் 5:23**இன்படி **"சிறைச்சாலை மிகுந்த பத்திரமாய் பூட்டப்பட்டிருக்கவும், காவற்காரர் வெளியே கதவுக்கு முன் நிற்கவும் கண்டோம் திறந்த பொழுதோ உள்ளே ஒருவரையும் காணோம் என்று அறிவித்தார்கள்."** ஆண்டவருடைய சொந்த சீஷர்களை சிறையினின்று தனது தூதனை அனுப்பி சிறையிலிருந்து வெளியே கொண்டு வருவாராகில் உங்கள் ஆத்மீக வாழ்க்கையில் முன் செல்ல முடியாமல். தேவ சித்தத்தை நிறைவேற்ற முடியாதிருக்கும். உங்களை இன்று விடுதலை செய்யாமலிருப்பாரோ! விசுவாசத்தோடிருங்கள். **வெற்றியின் நாள்!**

**ஜெபம்**

எனது அன்புத் தகப்பனே! இன்றும் நீங்கள் எமது ஒரே விசுவாசமாக இருக்கிறீர்கள். என் வாழ்க்கை சிறைப்பட்டிருக்கும் எல்லா சிறையிருப்புகளையும் மாற்றுங்கள். நீங்கள் என்னை விடுதலைப்படுத்தியருளுங்கள் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே .–ஆமென்–

**வேத வாக்குத்தத்தம்**

"நாள் உண்டாகாததற்குமுன்னும் நானே இருக்கிறேன்; என் கைக்குத் தப்புவிக்கத்தக்கவன் இல்லை; நான் செய்கிறதைத் தடுப்பவன் யார்?" (ஏசாயா 43:13)

ஜீவ மன்னா

பெப்ரவரி 28
சனி

## உங்களைக் குறித்த அனைத்து காரியங்களையும் அறிந்திருக்கும் தேவன் !

இன்றைய வேதவாசிப்பு
லேவியராகமம்
அதி: 16 – 17

**"நான் தீட்டுப்படவில்லை; நான் பாகால்களைப் பின்பற்றவில்லை என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? பள்ளத்தாக்கிலே நீ நடக்கிற மார்க்கத்தைப் பார்; நீ செய்ததை உணர்ந்துகொள்; தாறுமாறாய் ஓடுகிற வேகமான பெண்ணொட்டகம் நீ."** (எரேமியா 2:23)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! ஜீவனுள்ள தேவன் **இயேசுகிறிஸ்துவின் திரு இரத்தம் எங்களை நீதிமான்களாக மாற்றியபடியால் நாம் அவரின் கிருபையை பெற்று இன்றைய தினத்திலும் மனமகிழ்வுடன் இருக்கின்றோம்.** இம் மாதத்தின் கடைசி நாளாகிய இன்று தேவனுக்கு நன்றி கூறுவோம். எங்கள் ஆண்டவரானவர் தாமே இஸ்ரவேலரினதும் தேவனாயிருக்கிறார். **இஸ்ரவேலரின் செய்கைகளின் நிமித்தம் அவர்கள் மீது மிக கோபமாயிருந்தார்.** ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் துஷ்ட செய்கைகளின் நிமித்தம் அவர்கள் மீது தண்டனை இறங்கச் செய்தார். தங்களுடைய **கீழ்படியாமையின் நிமித்தமாக தங்களுக்கு இப்படி நேர்ந்ததென்பதை அவர்கள் புரிந்துக் கொண்டார்கள்.** இக்காரியம் உனக்கு நேரிட்டது உன் தேவன் உன்னை வழி நடத்தும் போது நீ அவரின் கையை விட்டு விலகி போனபடியால் அல்லவா? என்றார்.

அருமையானவர்களே! உலகரீதியில் ஜீவிக்கும் மனிதன் இன்னொரு மனிதனை விசுவாசித்து அவன் மூலம் அவன் வேதனைகளை பெற்றுக் கொள்ளக் கூடும். ஆனால் இஸ்ரவேலின் தேவனானவரான எமது ஆண்டவர் எம்மை தமது சொந்த ஜனமாக உலகிலிருந்து வேறு பிரித்துக் கொண்டபடியால் நாங்கள் அவரை மாத்திரம் நோக்கிப் பார்த்து அவரால் மாத்திரம் தேவைகளை பெற்றுக் கொள்கிறவர்களாய் இருக்க வேண்டும். இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தியரிடம் இருந்து விடுதலைப் பெற்று கானான் தேசத்தை நோக்கி வனாந்தர மார்க்கமாய் **பிரயாணம் பண்ணிய நாற்பது வருடகாலம் வானத்திலிருந்து மன்னா என்ற ஆகாரத்தை பொழியச் செய்து அவர்களை போஷித்தார்.** என்று வேத வசனம் கூறுகிறது. இது **அற்புதம்** அல்லவா?

தேவ பிள்ளைகளே! ஆயினும் அவர்கள் முழு உள்ளத்தோடு தேவனை தேடாதபடி இருந்த போது வேறு மார்க்கங்களில் நடக்கிற வேளையில் கர்த்தர் **"அவர்களை நோக்கி நான் தீட்டுப்படவில்லை நான் பாகால்களை பின்பற்றவில்லை என்று நீ எப்படி சொல்கிறாய் பள்ளத்தாக்கிலே நீ நடக்கிற மாரக்கத்தை பார் நீ செய்ததை உணாந்துக் கொள். தாறுமாறாய் ஓடுகிற பெண்ணொட்டகம் நீ"** என்று கூறினார். இதன்படி பார்த்தால் கர்த்தர் அவர்களுடைய சகல செயல்களையும் பார்த்தார் என்றும் யாவற்றையும் அறிந்திருந்தார் என்பதையும் அறியமுடிகிறது. ஆகையால் அவருக்கு முன்பாய் எம்மால் பொய்யுரைக்க முடியாது. உங்கள் வாழ்விலும் ஆத்மீக ஜீவியத்திலும் எவ்வகையான பிரச்சினைகள், துன்பங்கள், வந்த போதும் **நீங்கள் முகங் கொடுக்கும் ஒவ்வொரு சவால்களுக்கும் விடுதலை தேடி அங்கும், இங்கும் ஓடாதீர்கள். உங்கள் தேவனாகிய இயேசுகிறிஸ்துவிடமே காத்திருந்து ஜெயம் பெறுங்கள். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் அன்பின் பிதாவே! எல்லாவற்றையும் அறிந்தவரே! எம் காரியங்கள் நிறைவேறத்தக்கதாக உம்மையே காத்திருந்து உம்மிடமே யாவையும் பெற்றுக் கொள்ள கிருபை செய்தருளுமாறு
இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது,..." (எபிரேயர் 4:13)

# கையடக்கத் தொலைபேசியின் மூலம் சுகம், அற்புதம் பெற்றுக் கொள்ள முடியும்.

## கணனி நேரடி ஒளிப்பரப்புக்கு நீங்களும் பிரவேசிக்கலாம்.

பிரியமான தேவ பிள்ளைகளே!

எங்களுடைய சுகமளிக்கும் ஆராதனை ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 9.30 மணியிலிருந்து நேரடி ஒளிபரப்பாகும். அவ்வேளையில் உங்களுடைய கையடக்க தொலைபேசியிலோ அல்லது கணனி நேரடி ஒளிப்பரப்பின் மூலமோ முழுமையான சுகமளிக்கும் ஆராதனையை நேரடியாக காண முடியும். இதைக் குறித்து கையடக்க தொலைபேசியில் எந்தவித பணமும் அறவிடபடமாட்டாது என்பதை கருத்திற் கொள்ளவும்.

அதற்கு மேலாக எங்களுடைய வெப் நேரடி ஒளிபரப்பின் மூலம் எல்லா நிகழ்ச்சிகளும் *USTREAM* தளத்திலே சேகரிக்கப்படுகின்றதென்பதையும் 2013 டிசம்பர் மாதத்திலிருந்து இன்றைய நாள் வரையிலான எல்லா ஆராதனைகளையும் உங்களால் காண முடியும் என்பதை அறியத்தருகிறோம்.



**எங்களுடைய கணனி நேரடி ஒளிபரப்புக்குள் பிரவேசிக்க, இரண்டு முறைகள் உண்டு.**

1. Google.com » Ustream.tv » jesusnf (search) » jesusnf (click)
2. Google.com » jesusnf.org » Live Telecast

**கடந்த கால நிகழ்ச்சியினை கணனி நேரடி ஒளிபரப்பின் மூலம் காண வேண்டுமானால்**

- Google.com » jesusnf.org » Live Telecast
  வலது பக்கத்தில் கடைசியில் இருக்கும் Ustream யை க்ளிக் செய்ய வேண்டும்.




மேலதிக விபரம்: சகோதரன் திலிப் ராஜ் குமார் ☎ 077-8881823

எபல், என்ட்டோரயிட் கையடக்க தொலபேசியிலேயும் டெப் ஆகியவற்றிலும் காண்பதற்கு Ustream APP Download செய்து jesusnf என்பதை Search செய்யவும்.

Apple Android Ustream App



இலவசமாய் வழங்கும் சுவிஷேச VCD தட்டு (சிங்களம் தமிழ்).



பரிசுத்த வேதாகமம் (சிங்களம்,தமிழ்,ஆங்கிலம்)



சுவிஷேச துண்டுப்பிரதி



தேவ வசனங்கள் அடங்கிய ஜெப கைகுட்டை (சிங்களம் தமிழ்).




தேவ வசனங்கள் அடங்கிய பெனர் (சிங்களம்,தமிழ்,ஆங்கிலம் மும்மொழிகளிலும்).

# இதோ!

24 மணித்தியாலங்கள்
நாள் முழுவதுமாக
உங்களுக்காகவே திறந்திருக்கும்
புத்தம் புதிய SMS சேவைகள்! 071-5382867



→ குறுஞ் சேவையில் உங்கள் புகைப்படத்துடன் ஜெப விண்ணப்பங்களை அனுப்ப அரிய சந்தர்ப்பம் ←

பிரியமானவர்களே, நீங்கள் ஒவ்வொரு நாளும் முகங் கொடுக்க வேண்டிய உங்கள் பிரச்சினைகள், இக்கட்டான நிலமைகள், வியாதிகள், உபத்திரவங்கள் என்பனவற்றை உங்கள் புகைப்படத்துடன் எந்த வேளையிலும், எந்த நேரத்திலும் **SMS** செய்தியின் மூலம் இப்பொழுது உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு அறிவித்து மத்தியஸ்த ஜெபத்தை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள்.

**SMS எழுதி அனுப்பவும். 071-5382867**

தொலைத் தொடர்பில்லை!

உங்களுக்கு **Android** யிலும் **Apple & micro soft** கையடக்க தொலை பேசியின் மூலம் **Whats App, Viber, Line** என்பவற்றில் மாத்திரம் உங்கள் புகைப்படத்துடன் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எமக்கு அனுப்ப முடியும்,

இதன் மூலம் உங்களின் **Voice Messages** அனுப்ப முடியும்.

Whats App | Viber | Line

## ஜீவ மன்னா தின மஞ்சரி சம்பந்தமாக

- ஜீவ மன்னா தின மஞ்சரியை தபால் மூலம் பெற்றுக் கொள்ள!
- புதிய வாசகர்கள் மன்னா மஞ்சரியை பெற்றுக் கொள்ள அவர்களின் முகவரிகளை எங்களுக்குக் கிடைக்கச் செய்யவும்!

**SMS எழுதி அனுப்பவும். 071-0714011**

தொலைத் தொடர்பில்லை!

**விண்ணப்பமும் பதிலும் SMS செய்தியில் மாத்திரமே!**

ஜீவ மன்னா வாசக கட்டணங்கள், சந்தோஷ காணிக்கைகள், காசு கட்டளைகள் என்பனவற்றிற்கு!

**பணம் அனுப்ப**

கிராண்டபாஸ் தபால் காரியாலயம்
போதகர் ஏ.ஜே.ஜோசப் என்னும் பெயருக்கு அனுப்புங்கள்.

**பணம் வைப்பிலிட**

போதகர் ஏ.ஜே.ஜோசப்
கணக்கு இலக்கம் 8076982701
கொமர்ஷல் வங்கி, கிராண்ட்பாஸ் கிளை
பணத்தை வைப்பிலிட்டு பற்று சீட்டை எமக்கு அனுப்பவும்


போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
விலாசத்தை அனுப்பவும்

R/N:- QD/66/NEWS/2015


## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல 33/1, புதிய களனிப் பால வீதி, கொழும்பு — 14.
☎ 011-2334865 ✆ 071-4922929
arulandu.joseph@gmail.com www.jesusnf.org


இல 33:1 புதிய களனிப் பால வீதி, கொழும்பு -14, ஜீவ மன்னா குட் நிவ்ஸ் பிரின்டஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.